In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

கணபதி துணை

அருள்மிகு திருமேனி நாதர் சுவாமி உடன் துணை மாலையம்மான்

திருச்சுழியல் திருத்தல வரலாறு

திருச்சுழி
விருதுநகர் மாவட்டம்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

கணபதி துணை

அருள்மிகு திருமேனி நாதர் சுவாமி
உடன் துணை மாலையம்மான்



திருச்சுழியல் திருத்தல வரலாறு

திருச்சுழி
விருதுநகர் மாவட்டம்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரம்பரை அறங்காவலர்

இராணி திருமதி. R.B.K. இராஜேஸ்வரி நாச்சியார் B.A.,

இராமநாதபுரம் சமஸ்தானம், தேவஸ்தானம்

இராமநாதபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்

உயர்திரு. **வி. மகேந்திரன்** பி.ஏ., பி.எல்., அவர்கள்
திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர்
இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம்
இராமநாதபுரம் - 623 501.

அவர்களது அணிந்துரை

திருச்சுழியல் என்னும் திருத்தலம் பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற ஸ்தலங்கள் பதினான்கினுள் பத்தாவதாகும் "பாண்டிய பதிநான்கு தன்னில் பத்தாந்தல முடையார்" திருச்சுழியல் குரவைப் பாட்டு (14)

"கூடல் புனவாயில், குற்றாலம், ஆப்பனூர், ஏடகம், நெல்வேலி, இராமேஸ்வரம், ஆடானை, தென்பரங்குன்றஞ் சுழியில் தென்கானப் பேர் புத்தூர், வன்கொடுங்குன்றம், பூவணம்."

சேரமான் பெருமாளுடன் "ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தரிசித்து சுவாமிகளது "ஊனாயுயிர்" என்னும் தேவாரம் திருப்பதிகம் பெற்றுள்ள இத்தலம் பாண்டி நாடு எனும் பகுதியைச் சேர்ந்தது. திருச்சுழியல் என்பது மருவி, தற்போது திருச்சுழி என வழங்கி வருகிறது.

பண்டைக் காலத்திலிருந்தே செந்தமிழ் நாட்டுச் சேது வேந்தர்களால் பரம்பரை தர்மகர்த்தாக்களால் பரிசீலிக்கப்பெற்று கூறும் பழமையும் பெருமையும் வாய்ந்த ஆலயங்கள் பலவற்றுள், திருச்சுழியல் ஆலயமும் ஒன்றாகும் தற்காலப் பரம்பரை தர்மகர்த்தா அறங்காவலர் மாட்சிமை தங்கிய சேதுபதி ராணி திருமதி. **R.B.K. ராஜேஸ்வரி நாச்சியார்** B.A., அவர்களது

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொன்மையும், பழமையும் பெருமையும் வாய்ந்த இந்த சேது சமஸ்தானத்தின் புகழும் பெயரும் மென்மேலும் உயர தக்க வகையில் பாங்குறு செயல்படுவது இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு என்றும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை அந்த வகையில் தற்போது, கோவில் ஸ்தானிகர் சிவஸ்ரீ தெ.தெய்வசிகாமணி பட்டர் மகன் தெ. சாமிநாதன் என்ற தெய்வசிகாமணி பட்டரால் வெளியிடப்படும் "திருச்சுழியல் திருத்தல வரலாறு" எனும் நூல் பல சமய நூல்களின் ஆராய்ச்சிக்குத் தொகுப்பாக மிக மிக எளிய நடையில் வெளி வந்திருப்பது இந்து சமயம் மென்மேலும் தழைத்தோங்க உதவும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை சுவாமிகளின் இந்த தெய்வீகத் திருப்பணி மென்மேலும் வரை எல்லாம் வல்ல திருச்சுழியல் திருமேனிநாதன் பொற்பாதம் பணிந்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1968ல் வெளியிட்ட திருச்சுழியில்
தல வரலாறு புத்தகத்திலிருந்து
தொகுக்கப்பட்டது.

தொகுப்பு & வெளியீடு

சிவஸ்ரீ. **தெ.சாமிநாதப்பட்டர்**
181. கார்த்திகை வீதி,
திருச்சுழியல்
விருதுநகர் மாவட்டம் – 626 001.

அச்சிட்டோர்

அனு பிரிண்டர்ஸ்
10.T.T. கிருஷ்ணமாச்சாரி சாலை
விருதுநகர் – 626 001.

திருச்சுழியல் ஸ்தல வரலாறு வெளியிட உதவியவர் :

திரு. **க. கோமதிநாயகம்**
B.445, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் குடியிருப்பு
குமாரசாமி ராஜா நகர், விருதுநகர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருச்சுழியல் தல வரலாறு

தல விநாயகர் துதி

நீதிக்குஞ்சர நீர்மைய சூமாய்ப்
பேதிக்குஞ்சர வாய்ப்புக்கும் பேறதாஞ்
சோதிக்குஞ்சரக் கண்ணுமைக் குஞ்சுத
போதிக்குஞ்சரம் பொன்னடி போற்றுவாம்

- தல புராணம்.

1. தோற்றுவாய்

கடவுளை வழிபடுதற்குரிய இடங்கள் மூன்று. அவை யாவன கோயில், சிவஞானிகள், இதயம். இவற்றுள் சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிக அரிது.அதை இப்பிறவியிலே ஒரு முறையேனுங்காண முடியாது போகவுங்கூடும். இதய வழிபாட்டிலே கண் முதலிய பொறிகளும், தலை முதலிய உறுப்புகளும் தொழிற்பட மாட்டா. இவைகள் சிவத்தொண்டிலே சென்றால் மட்டும் தீய வழியிலே செல்லாமல் நிற்கும். இல்லையேல் தம் விருப்பப்படி இயங்கும். நமக்குள்ள எந்தக்கருவியையுந் தீயவழியிலிருந்து விலக்க அதை நேரே அடக்குவது மிக அரிது. அதற்கு நல்வழியைக்காட்டுவதே முறை. இக்கருத்துப் பற்றியே "பற்றுக பற்றற்றான் பற்றினையப் பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு" என்று திருவள்ளுவர் கூறினார். ஆகையால் மூவகை வழிபாடுகளுள்ளும் நமக்கு மிகப்பொருத்தமானது கோயில் வழிபாடே. மற்றவைகள் இதற்குத் துணையானவை. மூவகை வழிபாடும் வேண்டுவதே. கோயிலானது பாதகன் முதல் சிவஞானிகள் ஈறாக உள்ள யாவருக்கும் இன்றியமையாதது. சீவன் முத்தரானவற்கு கோயில் வழிபாடு மிக அவசியம் என்பது ஆகம முடிவு.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்கள் இம் மண்ணுலகத்திலே நால்வகை யோனியிலும், எழுவகைப்பிறப்பிலும், எண்பத்து நான்கு லக்கம் யோனி பேதங்களிலும், அளவின்றி வினை வயத்தாற் பிறந்திறந்து உழலுவன. சிவபெருமான் அவ்வுயிர்களை அவற்றினின்றும் எடுக்கு நிமித்தத்தால் உலகை உண்டுபண்ணுங்கால், தலம், தீர்த்தம், மூர்த்தியென்னும் மூன்று வடிவாய் விளங்கினார். இம்மூன்றினையுஞ் சிவப்பெருமானாகவே எண்ண வேண்டும். அவ்வாறு அவைகளை முறையாக வணங்குவோர் பரமஞானாசிரியரால் உண்மை விளங்கப்பெற்று முக்தியடைவார்கள்.

சிவன் கோவில் இல்லாத ஊர் எவ்விதச் செல்வங்களால் நிறைந்திருப்பினும் திருவமைந்த ஊரன்று. அது காடேயாம். " அவையெல்லாமூரல்ல அடவிகாடே " என வரும் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தால் அறிக. "விபூதியில்லாத நெற்றிபாழ் சிவாலயம் இல்லாத ஊர்பாழ். சிவபெருமானைப் பூசியாத பிறவி பாழ், சிவபெருமானைப் பற்றிக் கூறாத நூல் பாழ்." எனவரும் பிருகச்சாபால உபநிடத வாக்கியமுங் காண்க. உமாபதி சிவாசாரியர் " கோவிலை மறந்தவர்கள் புலையரென்று பாடினார். சிவவடிவங்களாகிய தலங்களோ அளவில்லாதன. ஆயிரங்கோடியுண்டு. அவைகளுள்ளும் ஆயிரத்தெட்டுத்தலங்களே மேலானவை. அவைகளுள்ளும் நாயன்மார்களால் தேவாரப் பாடல் பெற்ற இருநூற்றெழுபத்து நான்கு தலங்கள் மிகச் சிறந்தவை.

அவையாவன :

* ஈண்டு புகழ்ச்சோணாட்டிலொரு நூற்றுத்
தொண்ணூ றீழத்திரண்டு
பாண்டி யிலீரேழ் மலை நாட்டொன்று
கொங்கேழ் மகதமிருபத்திரண்டு
பூண்ட தொண்டை நன்னாட்டெண்ணான்குதுளு
வொன்று வடபுலத்தைந்தாக
வாண்ட சிவதல மிருநூற்றெழுபத்து
நான்கு தொகையாகும் மன்றே *

- சிவக்ஷேத்திர விளக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

* இதில் பாண்டி நாட்டுத்தலங்கள் பதினான்கு.

* அதில் திருச்சுழியல் பத்தாவது தலம்.

இத்தல வரலாற்றை ஒரு சிறிது கூறுவோம்

*	சோழ நாட்டுத் தலம்	190
	ஈழநாடு	2
	பாண்டி நாடு	14
	மலை நாடு	1
	கொங்கு நாடு	7
	மகத நாடு	22
	தொண்டை நாடு	32
	துளுவ நாடு	1
	வட நாடு	5
		274

* கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடக நெல்வேலி இராமேசம் - ஆடானை
தென்பரங்குன்றஞ் சுழியல் தென்கானப்பேர்புத்தூர்
வன்கொடுங் குன்றம் பூவணம்.

* "பாண்டி பதினாலு தன்னில் பத்தாந்தல முடையோர்" என்றார் திருச்சுழியற்குரவைப் பாட்டில் (14)

உ. தலமும், இருப்பிடமும்.

சீர்மன்னு செல்வக்குடிமல்கு சிறப்பினோங்குங்
கார்மன்னு சென்னிக்கதிர் மாமணிமாடவைப்பு
நார்மன்னு சிந்தைப்பலநற்றுறை மாந்தர்போற்றும்
பார்மன்னு தொன்மைப்புகழ் பூண்டதுபாண்டி நாடு

\- திருத்தொண்டர் புராணம்.

சிவபெருமானுக்குப் பாண்டி நாடே பழம்பதி. சிவபெருமான் அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்தான். அவன் உறையும் நாடு "தென்பாண்டி நாடே தெளி" என்று மணிவாசகர் கூறுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாண்டி நாடே " தமிழ் நாடு " எனத்தெய்வச்சேக்கிழார் அருளியுள்ளார். பரந்த உலகமாகிய நில மடந்தை என்னும் அழகிய நங்கைக்கு அவள் மார்பினிடத்தில் அணியப்பெற்ற ஒளி வீசும் பதக்கமே பாண்டியநாடு. அங்குள்ள நகரங்கள் பதக்கத்தில் ஒழுங்காகப்பதிக்கப்பெற்ற மணிகளாக விளங்கும் என்றும், பாண்டி நாடு என்னும், நங்கைக்கு கொப்பூழ் அங்கமே திருச்சுழியல் என்றும், பரஞ்சோதி முனிவர் பகர்கின்றார்.

எல்லா உலகங்களையும் ஈன்றருளிய தாயாகிய தடா தகைப் பிராட்டியாரும், ஞானவொளிப் பிழம்பாகிய சோம சுந்தரக் கடவுளும், அவர்கள்மதலையாகிய உத்திரகுமார வழுதியும் என மூன்று தலைவர்களும் செங்கோல் செலுத்திய நாடு இந்தப்பாண்டிய நாடல்லாமல் கடல் சூழ்ந்த நிலவுலகில் வேறு நாடுகள் இல்லை. எனவே பாண்டிய நாட்டின் பெருமை அளவிடற்கரியது. இத்தகைய பாண்டிய நாட்டில் ஒரு சமயம் மன்னனும் மக்களும் சமண சமயத்தைச் சார்ந்து இருந்தமை திருஞானசம்பந்தர் வரலாற்றால் அறிவோம். அவர் எழுந்தருளி மதுரை வந்து சமணர்களை வாதில் வென்று சிவபெருமான் முதற்கண் நிறுத்திய மெய்ச்சமயமாகிய சைவ சமயத்தை மீண்டும் நிலைபெறச் செய்தருளிச் சைவமுதற்குருவாய் விளங்கினர். இன்று சைவம் வாழுமாறு செய்த கருணை திருஞானசம்பந்தப் பெருமானையே சாரும். அவருக்குக் கவுணியர் என்றும், கவுணிய கோத்திரர் என்றும் பெயர். இவரது கோத்திர மூல புருடராகிய கவுண்டின்யன் முனிவர் தன் குலத்திலே திருஞான சம்பந்தப் பெருமான் அவதரித்துத் தன் பெயரையுங் கொண்டு விளங்க எங்கே சென்று தவஞ்செய்து பேறுபெற்றார் என வினவின் அது திருச்சுழியலே யாம்

மோன முனிவீர் முத்திமாநகராந் திருச்சுழியல் முற்றியன்றோ
மான கவுணியமுனிவன் பேறுபெற்றான் வாழ்வா மெங்கள்
ஞான முனிசம்பந்தன் சீகாழித்துரை வள்ளனயந்து தன்சீ
ரான குலத்தவதரிக்கத்தன் பேரைத் தவதரிக்கவருள் பெற்றானால்

– தல புராணம்.

திருச்சுழியற் பெருமை ஒருவரால் சொல்லி முடிக்குந் தன்னை யுடையதல்ல. ஒருவாறு சுருக்கமாகவே கூற முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சுழியல் பாண்டிய நாட்டில் * பரிதிகுடி நாடு என்ற பகுதியில் விளங்குவது. மருத நிலத்தைச் சார்ந்தது.

திருச்சுழியல் எல்லை :-
வடக்கு - காலவதீர்த்தம்
கிழக்கு - கண்ணுவதீர்த்தம்
தெற்கு - கோபிதார்வனம்
(ஆலடிபட்டி கிராமம்)
மேற்கு - பன்னக சைலம்
(பாறைக்குளம் குன்று)

திருச்சுழியல் தற்காலம் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டைக்குக் கிழக்கில் 14.கி.மீ தொலைவில் உள்ளது. விருதுநகர் இரயில் நிலையத்திற்கு கிழக்கே 31கி.மீ.. மதுரைக்குத் தெற்கே 50கி.மீ. மதுரையிலிருந்தும் விருதுநகரிலிருந்தும் அருப்புக்கோட்டை வழியாக மோட்டார் வண்டிகள் செல்கின்றன. தற்போது விருதுநகர் மானாமதுரை இரயில்பாதை இணைப்பில் இத்தலத்திற்கு இரயில் நிலையம் ஏற்பட்டு இருக்கிறது. 25.5.1964 தேதி முதல் இரயில் வண்டிகள் செல்கின்றன.

திருச்சுழியலில் ஏறத்தாழ 1500 வீடுகள்உள்ளன. அதில் ஏறத்தாழ 6000 மக்களும் உள்ளனர். ஊராட்சி மன்ற ஆட்சி உடையது. தந்தி, தபால், தொலைபேசி நிலையம், கார் நிலையம், துணைப்பதிவாளர் அலுவலகம், போலீஸ் நிலையம் முதலியவையுள்ளன. மருத்துவமனை, கால்நடை மருத்துவ மனை, தொடக்கப்பள்ளிகள் ஐந்தும், மேல் நிலைப்பள்ளிகள் இரண்டும் ஆகியவையுள்ளன. இது ஒரு தாலுகாவின் தலைநகரமாக உள்ளது.

* " கதிரவன் பரிதிநன்னாடென்னு மிடங்கண்டு
சிவலிங்கமுந் தாபித்தான் "

- தல புராணம்.

வருடத்தில் இரு முறை சிவலிங்கத்தின் மீது சூரியனது ஒளி வீசுவதைக் காணலாம்

1. மார்கழி மாதம் திருவாதிரை,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. தலப் பெயர்கள்

1. வயலூர்
2. முத்திமாநகர்
3. முத்திபுரம்
4. முத்திநகர்
5. ஆவர்த்தபுரம்
6. சூலபுரம்
7. சூலநகர்
8. திரிசூலபுரம்
9. அரசவனம்
10. போதிவனம்
11. சுழிகை
12. சுழிகாபுரி
13. சுழியல்
14. திருச்சுழியல்

தற்போது " திருச்சுழி " என்று அழைக்கின்றனர். ஒரு சமயம் சிவபெருமான் பிரளயத்தைச் சுழித்துப் பூமிக்குள் புகச்செய்தனர். ஆதலின் திருச்சுழியல் எனப்பெயர் ஏற்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் திருச்சுழியல் என்றே குறித்துள்ளார்.

4. தலப்பெருமை

" கலித்தவூழிகள் பலபல சதுர்யுகங்கண்டு
சீதரன்தொழுங்கயிலையிற் சிறப்பிது வென்றே
வேதநாயகனிருக்கின்றான் சுழியலின் மேவி "

என்று தல புராணம் கூறுகிறது. கிரேதாயுகத்தில் பூமி தேவி பூசித்தாள், திரேதாயுகத்தில் பிரளயஞ் சுழித்த லீலை நடந்தது. துவாபரயுகத்தில் கௌதமர் அகலிகை இருவரும் திரு நடனமும், திருமணக்கோலமுங் கண்டனர். கலியுகத்தில் கடைச்சங்கத்துத் தமிழ்ப்புலவர்கள் வழிபட்டனர்.

மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் பாண்டி நாட்டு அமைச்சராக இருந்தவருமான மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தை வழிபட்டுத் திருக்கோவையாரில் சிறப்பித்துள்ளார். ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்த நாயனார் மதுரை வந்து சைவ சமயத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலைபெறச் செய்த பின் தானும் தன் தந்தை சிவபாத இருதயர், நின்றசீர்நெடுமாறர், மங்கையர்கரசியார், குலச்சிறையார் திருநீலகண்ட யாழ்ப்பாணர், பதினாறாயிரம் அடியார்கள் புடைசூழவந்து பாடி வழிபட்டுள்ளார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞான சம்பந்தர் வந்து சென்ற பின்பு வந்து வழிபட்டுக் காப்புத் திருத்தாண்டகத்தில் சிறப்பித்துள்ளார்.

ஒன்பதாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாணாயனாருடன் வந்து வழிபட்டு "ஊனாயுயிர்" எனத்துவங்கும் தேவாரப்பதிகம் இசைத்துப் பள்ளிமடத்தில் தங்கி இருந்தார். ஒரு நாள் காலையில் சிவபெருமான் சுந்தரரின் கனவில் தோன்றிச் செங்கையிற் பொற்செண்டு, திருமுடியிற் சுழியமுடன் எங்குமிலாத் திருவேடம் என்புருகமுன் காட்டி " கானப்பேர் நாமிருப்பது" எனக்கூறிமறைந்தருளினார்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்து அதிசயித்து இறைவன் காளைப்பருவத்தினராய்க் காட்சி தந்ததை சேரமானுக்கும் அறிவித்துத் " தொண்டரடித் தொழலும் " என்ற பதிகம் பாடிக்கானப்பேருக்குச் சென்றார். இவ் வதிசயம் நிகழ்ந்த இடம் பாவகரி நதி கீழ்க்கரையில் உள்ள பள்ளிமடம் கிராமமாகும். அந்த இடத்தில் காளையார் கோவில் ஏற்பட்டுள்ளது. சுந்தரர் திருநாட்டுத் தொகையிலும், திரு இடையாற்றுத் தொகையிலும் இத்தலத்தைப் போற்றியுள்ளார்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் சமயாசாரியர் மூவரும் வழிபட்ட வரலாற்றைப் ப்னிரெண்டாந்திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தில் (பெரிய புராணம்) பாடியுள்ளார்.

திருமலைநாயக்கர் காலத்தில் (கி.பி 1623 - 59) வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் இத்தலத்தை வழிபட்டுத் தாம்பாடிய மீனாட்சியம்மை குறத்தில் இத்தலத்தைக் குறிப்பிடுகிறார். துணை மாலையம்மை பிள்ளைத்தமிழ் இவரே பாடியிருக்கலாம் என்றும் கூறுவர்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலபுராணத்தில் கூறப்படும் தலப்பெருமை

தருமமானது தாம் உறைவதற்கிடமாகச் சதுர்யுகந்தோறும் முறையே நாவல், மா,மகிழ், அரசு விருட்சங்களாக கல்வைக்கடலருகே விளங்கும். யுகந்தோறும் இவ் விருட்சகத்தின் கீழ் விநாயகர் எழுந்தருளியிருப்பர். இதனால் " தாவர விநாயகர் " என்றும் பெயர் பெறுவர். எத்தலங்களில் செய்த பாவங்களாயிருப்பினும் திருச்சுழியலைக் கண்ட போது நீங்கும். திருச்சுழியலில் செய்த பாவங்கள் அங்கு தீர்வதன்றி வேறு எந்தத் தலம் சென்று இறைஞ்சினும் நீங்கா.

பன்னக சயிலமே கயிலே மலையாகும். கௌண்டின்ய நதி(பாவகரி) யே கங்கையாகும். சுழியற்பரமனே குரு நாதன். அங்கு வாழ்கின்ற மனிதர்கள் யாவரும் உம்பர்.

அறிவினால் தவம் புரிவது அவரவர் செய்வது. ஆனால் திருச்சுழியலில் மனிதர்கள் மட்டு மல்லாமல், பறவை, மிருகம், கிருமி, கீடம் முதலிய யாவும் இறுதியிற் சிவபதம் பெறும். திருச்சுழியலைக் கருத்துற நினைக்க, பேச, காணச்சிவபதந் தருமென வேதங்கள் முழங்கும். கயிலையெம் புனிதன் இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தலங்களிலும் கலந்தருள் செய்வானயினும், கொடிபோன்ற மெல்லிய இடையையுடைய துணைமாலைத்தேவியுடன் இடைவிடாதமர்ந்து அருள் செய்வது அடியாருடைய இதயமும் திருச்சுழியலுமே யாகும் என வேதங்கள் முழங்கும்.

அறிந்து செய்த பாவம், அறியாது செய்த பாவம், மறந்து செய்த பாவம், மறவாது செய்த வஞ்சம் யாவும் திருச்சுழியலைச் சேர்ந்தால், புயல் காற்றிலகப்பட்ட பஞ்சு போல் பறந்துபோகும்.

திருச்சுழியலில் வந்து ஒரு வேலை தங்கிச்சென்றோர் சாலோக பதவி பெறுவர். திருச்சுழியலிலேயே பிறந்து மரித்தோர் முத்தராவார். அவர் மீண்டு உலகினில் வாரார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏனைய தலங்களில் செய்யும் வேள்வி விரதங்கள் முதலியவையின் பயனைவிட ஆயிரமடங்கு பயன் திருச்சுழியலில் செய்வோர் பெறுவர்.

காசி, திருக்காளத்தி, திருக்கழுக்குன்றம், சிதம்பரம், கும்பகோணம், திருவாரூர் முதலிய தலங்களில் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் எல்லாம் திருச்சுழியலிலே சிவனடியார்க்கு வழங்கும் ஒரு பிடி சோறு வழங்கும்.

யாவராயினும் திருச்சுழியலில் எவ்வளவேனும் சிவ திருப்பணி செய்வோம் என நினைத்தாலும் அவர் இருப்பது கயிலையே. அத்திருப்பணியை ஐயமேற்றேனும் உவகையாற் செய்து முடிப்பவர் பெறும் பயன் சொல்ல இயலாது.

திருச்சுழியற் பரஞ்சுடரைக் காலையிற்றொழப்புரவி வேள்விப் பயன் காட்டும். உச்சியில் தொழ இராசசூயப் பயன் எய்தும். மாலையில் தொழச் சீவன் முத்தியே.

திருச்சுழியற் பெருமானைப் பால், நெய், இளநீர், புனல் முதலிய பொருள்களால் விதிப்படி அபிடேகமியற்றினோர் தாம் விரும்பும் வண்ணம் செல்வந்துய்த்து இறுதியில் கயிலை சென்று வாழ்வார்.

திருக்கோகரணம் முதலிய அரிய பல இலிங்கத்தின் முடிமேல் ஆயிர வில்வத்தளம் அருச்சித்த பலன் எல்லாம் திருமாலும், நான்முகனுந்தேடிக்காணாதசுழியல் நாயகன் முடிமேல் சிவராத்திரியன்று நடு நிசியில் அருச்சிக்கும் ஒரு வில்வத்தளம் வழங்கும்.

வடக்குக் காலவ தீர்த்தம், தெற்கு கோபிதார்வனம், மேற்குப் பன்னக சயிலம் கிழக்குக் கண்ணுவதீர்த்தம் இதற்குட்பட்ட இடம் காசிதன்னிலும் ஏற்றமாக நவில்வர். கவுண்டின்ய நதியின் மணல் எல்லாம் லிங்கமாகக் கவினுற விளங்கும்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. தீர்த்தங்களும், மேன்மைகளும்

1. பாவகரி நதி

இது ஊருக்கு வடக்கே கிழக்கு நோக்கி வந்து பின் தென்வடலாக தெற்கே செல்கிறது. கௌண்டின்ய நதி என்றும் தற்காலம் " குண்டாறு" எனவும் வழங்கும் கவுண்டின்ய முனிவர் தவத்திற்கிரங்கி இறைவன் அழைத்த நதி. " மகிழ்தர விவ்வாறழைத்தனம். உனது பொருட்டினின் வந்த காரணத்தாற் பகர்தரு கவுண்டின்ய நதி யென்று நாமம். இப்புனல் படிவோர்க்குச் சகல பாவமும் போமாதலாற் பாவகரியெனும் பெயர் தரித்தனமால்" சுழியற் புராணம் பாவகரிச் சருக்கம் 33

பாவகரி நதியை நினைக்குமுன் மனப்பீடை போகும். அதைக்கண்ட மாத்திரத்தாற் கிரகதோடப்பகை மாறும். பாவகரிப்புனல் உட்கொள்ள கொடும்பிணி அடங்கலுமகலும். பாவகரியில் மூழ்கின் பெண்வதை அந்தணர் வதை, கோவதை ஒழியும் " நதிகளிற்கங்கா நதியை மேலாகப் புவியுள்ளோர் நவில்வது வழக்கே. கதிதரும் பாவகரி நதிப்பெருமை யாவரே கணித்திடவல்லார், புதிய மென்பஞ்சுக் குவடெனக் குவித்த குவியலிற் புகு கனலது போல அதிக வெம்பாவம் யாவையும் நொடிக்குளரிக்கு மிந் நதி படிந்தாடில் " - தலபுராணம்.

உ. கௌவைக் கடல்

இது சந்நிதிக்கெதிரில் படிக்கட்டுகள், மையமண்டபத்துடன் விளங்கும் குளம். " ஒலிப்புணரி" என்றும் பெயர். " கௌவைக் கடல் கதறிக்கொணர் முத்தம் " என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் சிறப்பிக்கப் பெற்றது. சிவபெருமான் பிரளயத்தைச் சுழித்து இத்தீர்த்தத்தின் பிலத்துள் புகச் செய்தனர் என்பது புராண வரலாறு. இதில் மூழ்க எண்ணுவார், படிவார், மூழ்கி எதிர்வருபவரைக் காண்பார் செய்த வினை அன்றே தீரும். விண்ணவராவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. பூமி தீர்த்தம்

இது பூமிதேவியால் உண்டாக்கப்பட்டது. சந்நிதிக் கெதிரில் ஆற்றுக்குச் செல்லும் பாதையில் உள்ளது. பூமி தீர்த்தத்தில் நீராடிப் பூமிநாதனை இறைஞ்சினோர்கள் இகத்தில் செல்வம் பெற்றுவாழ்வர். பின் கூற்றை வென்று சிவபதத்திருப்பர்.

4. சூல தீர்த்தம்

"சிவகங்கை" யென்றும் பெயர். இது கௌவைக்கடல் மைய மண்டபத்திற்கு பின் ஈசான மூலையில் உள்ளது. உமையவட்காக இறைவன் சூலத்தால் கல்லி பாதாள கங்கையை தருவித்தது. இதில் மூழ்கி தரும தாவரத்தை வலம் வந்தபின் வரதனைப்பணிவோர் பிறப்புத் துன்பம் நீங்குவர். மீண்டும் இவ்வுலகுக்கு வாரார். கங்காதேவி வியேதன் பாபமனைத்தையும் போக்கும் பொருட்டு ஆண்டு தோறும் மாசிமாத நிறைமதியன்று நடுப்பகலில் இதில் மூழ்கி திருமேனிப் பெருமானை வழிபடுகிறாள் என்று வட மொழித் திருசூலபுர மான்மியம் கூறும்.

இது கோயிலுக்குள் வடக்கு வாசல் அருகே உள்ளது. பிரமதேவன் வந்து பூசித்து உண்டாக்கப்பட்டது. இதுவே பிரயாகை என இறைவன் கூறியது. இதிற்படிவோர். செல்வந்துய்த்து நமன் வசம் அகப்படாமல் சத்தியலோகஞ் செல்வர்

6. திரிநயன தீர்த்தம்

இது திருச்சுழியலுக்கு வடகிழக்கு அஞ்சானைக் குத்திக் கிராமம் கண்மாய் உள்வாயில் சோமசேகரலிங்கந்தாபித்த சந்திரசேன பாண்டியனால் உண்டாக்கப்பட்டது. இதில் மூழ்கி சோமசுந்தரனைப் பணிவோர் சித்தத்தில் நினைத்த யாவும் எளிதிற் கிடைக்கப்பெறுவர். புத்திரர் முதலாய செல்வம் பெறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7 .ஞானவாவி

இது மேலரதவீதியில் திருமதிலை யொட்டியுள்ளது. ஐந்து மூலைக்கிணறு என்று கூறுவர். கௌதம முனிவரால் காணப்பெற்றது. இதில் மூழ்குவோர் பிணிதீரும். பழவினையொழியும். எது விரும்பினும் வந்து வாய்க்கும். பிறவித் துன்பம் என்பதே இல்லை.

8 .காலவ தீர்த்தம்

திருச்சுழியலுக்கு வடக்கே ஆமைக்குளம் கிராமத்தின் வடபுரம் காலவ முனிவர் பூசித்த காலவ லிங்கத்தின் அருகேயுள்ள ஓடையாகும். இதிற் படிந்து பிஞ்ஞுகனைப் போற்றி இதன் கரை தனில் பண்டைப்பிதிர் கடன் ஆற்று வார், சரயு, கங்கை, பிரயாகையில் செய்த பலன் அடைவர்.

9 .கண்ணுவ தீர்த்தம்

திருச்சுழியலுக்குக் கிழக்கே சப்பாணி ஏந்தல் கிராமத்திற்குத் தெற்கே கண்மாயில் கண்ணுவ முனிவர் பூசித்த கண்ணுவ லிங்கத்திற்கருகே யுள்ளது. இதில் மூழ்குவோர் விண்ணவராவார்.

10 .கோடி தீர்த்தம்

இது அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையாக புறப்பட்டு பாண்டிய நாட்டுக்கு வந்து, பாண்டியன் மகள் சித்திராங்கதையை மணந்து, அவளுடன் திருச்சுழியல் வந்து, திருமேனிப்பெருமானை இறைஞ்சி, தன் காண்டீபத்தின் கோடியால் கல்லி, உண்டாக்கப்பட்டது. அதனால் கோடி தீர்த்தம் என வழங்கும். இது கோயிலில் அம்மன் சந்நிதி முன்புள்ள கிணறு. இதில் மூழ்குவோர் பாபமெல்லாம் நீங்கி எல்லா மங்கலங்களையும் பெறுவர். தேவஸ்தானத்தார் மேல் தளத்தில் நீர்த் தேக்கம் கட்டி வடக்குத் திருமதிலை யொட்டி குழாய்கள் வைத்துக் கொடுத்துள்ளனர். ஊர் முழு வதுக்கும் இதன் மூலம் தண்ணீர் கிடைக்கிறது. இந்த தீர்த்தம் எப்பொழுதும் வற்றாத பெருமையுடையது.

(பாவகரி, கவ்வைக்கடல் தவிர மற்றவைகள் அட்ட தீர்த்தங்கள் எனப்படும்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. கோயில் அமைப்பும் வழிபடு முறையும்

கோவில், நகரின் தென் பகுதியில் தெற்குத்தேர் தெருவை அடுத்து அமைந்துள்ளது. திருச்சுழியலுக்குச் சென்றவுடன் முதலில் நாம் காண்பது கீழைத்தேர் தெருவில் தேர் நிலையமும், யானை கட்டப்பட்டுள்ள மகாலும், செழித்து வளர்ந்தோங்கியுள்ள தலவிருட்சமாகிய திருவரசும் விநாயகர் கோயிலுமாகும். கோயிலின் கீழ் வாயிலில் நுழைந்தவுடன் வலதுபுறம் சுவாமி சந்நிதிக்கெதிரில் மைய மண்டபத்தோடும் படிக்கட்டுகளுடன் உள்ள " கௌவைக் கடல் " தெப்பக்குளத்தைக் காணலாம். அதற்கடுத்துள்ளது ஆத்தான மண்டபமாகும், இம் மண்டபத்தில் இறைபணியாளர் அலுவலகம் உள்ளது.

அடுத்து முதலாவது குடவரை வாயிலில் நுழைந்தவுடன் காண்பது கம்பத்தடி மண்டபமாகும். இம்மண்டபத்தில் பலிபீடம், கொடிமரம், இடபதேவர் உள்ளனர் விநாயகரும், வள்ளி தேவயானை இருமருங்குடைய சுப்பிரமணியர் சந்நிதிகள் உள. பலிபீடத்துக்கு இப்பால் எட்டுறுப்பும் தோய வணங்கி விநாயகரையும் சுப்பிரமணியரையும் வழிபட்டு உள்ளே செல்ல வேண்டும்.

அடுத்துள்ள குடவரை வாசலின் மேலே தான் ஏழு நிலைக்கோபுரம் உள்ளது. இவ்வாயிலில் அதிகார நந்தியுள்ளார். அவரிடம் உள்ளே சென்று வணங்க அனுமதி வழங்குமாறு வேண்டிக் கொண்டு உள்ளே சென்றால் ஆறு காற்பீடத்தைக் காணலாம். இங்கே சுந்தரமூர்த்திகள் தேவாரத்தைக் கற்களில் பொறித்து வைத்திருப்பதைக் காணலாம். அதற்கடுத்து நுழைந்தவுடன் சபா மண்டபம், அந்தராள மண்டபம், அர்த்த மண்டபம், அடுத்து மூலத்தானம் உள்ளது. மூலத்தானத்தில் திருமேனிப்பெருமான் சுயம்புலிங்கமாக காட்சி தருகிறார். அவரை அந்தராளமண்டபத்திலிருந்து வழிபட்டுச் சபா மண்டபத்தில் நடராசரையும் மற்றும் அங்குள்ள உற்சவ மூர்த்திகளை (சந்திரசேகரர் பிட்சாடனர், சமயாசாரியர்) வழிபட்டு ஆறுகாற் பீடம் வழி வலம் வரவேண்டும். முதற்பிரகாரம் உட்பிரகாரம் என்றும் நாயக மண்டப பிரகாரம் என்றும் வழங்கப்படும். இப்பிரகாரத்தில் கிழக்கே உள்ள உஷா பிரத்யுஷாதேவி இருபுறமுடைய சூரியனையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெற்கேயுள்ள அறுபத்து மூவர் சேக்கிழார், சந்தானாசாரியர், சப்த மாதர்கள் இவர்கள் திருவுருவங்களையும் வழிபட வேண்டும்.

நடராசர் சந்நிதிக்கெதிரில் அறுபத்து மூவருக்கிடையில் கௌதமர் அகலிகை உருவங்கள் உள. இவர்கள் திரு நடங்கண்டமையால் சுழிகையம்பலம் எனப்பெயர் வழங்கும்.

முதற்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் உற்சவ நாயகர் (சோமாஸ்கந்தர்) எழுந்தருளியுள்ளார். அதற்கடுத்து விக்கினேச்சுரர், காசி விசுவநாதர், விசாலாட்சி பூமி நீளாதேவி இருபுறமுடைய சுழிகைக் கோவிந்தரும் (திருமால்) உள்ளனர். இவர்களை வழிபட்டு வடமேற்கு மூலையில் வள்ளி தேவயானை இரு மருங்குமுள்ள சுப்பிரமணியக் கடவுளை நின்ற கோலத்தில் காணலாம். அவரை வழிபட்டு சண்டேச நாயனாரது தனிக் கோவிலில் சிவபெருமானை வழிபட்ட பயனைத்தந்தருளுமாறு வேண்டிக்கொண்டு வருவோமானால் வடக்கில் பாத்திரம் வைத்துள்ள அறையையும் திருவாபரணம் வைத்துள்ள கருவூலத்தையும் காணலாம். அடுத்து உற்சவ நடராசர் எழுந்தருளியுள்ள மண்டபமும், யாகசாலை மண்டபமும் அடுத்து கால பைரவரையும் கிருத்திகை உரோகிணி இருபுடையுடை சந்திரனையும் வழிபடவேண்டும்.

கருவறையைச் சுற்றித் தெற்கே தென்முகக் கடவுளும் மேற்கே இலிங்கோற்பவரும் (அண்ணாமலையார்) வடக்கே துர்க்காதேவியும் உள்ளனர்.

பின் எழுநிலைக்கோபுரமுள்ள வாயில் வழிவந்து தெற்கே தேவியார் சந்நிதிக்குச் செல்லவேண்டும். இதற்குகிடையில் உற்சவ நாயகர் உற்சவ காலங்களில் எழுந்தருளும் கருங்கற்சவுக்கை மண்டபமும் அடுத்து நடுப்பிரகாரமும் உள்ளது. இங்கே தென் கிழக்கு மூலையில் மடைப்பள்ளியும் அடுத்து படித்தரச் சாமான்களுள்ள அறையும் உள்ளன. அம்மையின் கோவிலில் நுழைந்ததும் பலிபீடம், கொடிமரம் இடபதேவரும் அடுத்து ஆறுகாற் பீடத்தையுங் காணலாம். அதற்கடுத்துள்ளது பள்ளியறை மண்டபம். அடுத்து அர்த்த மண்டபமும் அம்மை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலத்தானமும் உள. மூலதானத்தில் துணைமாலை நாயகியை வழிபட்டு வலம் சென்று அனுக்ஞை விநாயகர் மேற்கே விநாயகர் சுப்பிரமணியரை வழிபட்டு வடக்கு பிரகாரம் சண்டேசரது சத்தியாகிய யமநீயம்மைத் தனிக்கோவிலில் அம்மையை வழிபட்ட பயனைத்தருமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். கருவறையைச் சுற்றி முறையே தெற்கே இச்சாசத்தி மேற்கே ஞான சத்தி வடக்கே கிரியா சத்தியுள்ளனர். பின்பு திருவாச்சி மண்டபம் வந்து தெற்கு நோக்கி தெற்கு ஆடி வீதியில் வலம்வரத் தொடங்க வேண்டும். ஆடிவீதியின் தென்மேற்கு மூலையில் அண்டம்பிரண்ட விநாயகரையும் மேலை ஆடி வீதியில் தல விருட்சமாகிய புன்னை விருட்சத்தையும் வடமேற்கு மூலையில் வள்ளிதேவயானை இருபுறமுடைய கிருத்திகா சுப்பிரமணியரையும் வழிபட வேண்டும். வடக்கு ஆடிவீதியில் பிரளயவிடங்கர் தனிக்கோவிலும் பிரம தீர்த்தமும் உள. இங்கேவழிபட்டு கிழக்கே வருவோமானால் மேற்கு நோக்கிய தண்டபாணிசுவாமி கோவிலைக் காணலாம். அங்கே சென்று தண்டபாணியை வழிபட்டு தெற்கே வந்தால் நவக்கிரகத்தைக் காணலாம். நவகிரகத்தை வழிபட்டுப் பின்னர் சுவாமி சந்நிதிநேர் நின்று மீண்டும் திருமேனிநாதரை வணங்கி ஆத்தான மண்டபத்தில் அமர்ந்து ஐந்தெழுத்தை இயன்றவரை எண்ணி அப்பால் எழுந்து போதல் வேண்டும். வடக்கு வாசலுக்கருகே பழைய திருக்கல்யாண மண்டபத்தில் திருப்புகழ்ச் சபை உள்ளது. அங்கு திருமுருகனை வழிபட வேண்டும்.

7. மூர்த்தியின் பெயர்கள்

1. தலவிநாயக மூர்த்திகள்

1. தாவர விநாயகர்
2. தருமதாவரப் பிள்ளையார்
3. போதி விநாயகர்
4. போதிக் குஞ்சரம்
5. அரசமர்ந்த அத்தி
6. போதிக்களிறு
7. திருவரசு விநாயகர்
8. வேலடி விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. சுவாமியின் திருநாமங்கள்

1. பூமிநாதர்
2. பூமீசர்
3. புவனேசர்
4. மணக்கோலநாதர்

பெருமான்

"செற்றார் திருமேனிப் பெருமானூர்" - திருச்சுழியல் தேவாரம்

3. தேவியர் திருநாமங்கள்

1. முத்துமாலையுமையாள்
2. மாணிக்கமாலை
3. சொர்ணமாலை
4. மாணிக்கவல்லி
5. சகாயவல்லி
6. துணைமாலையம்மை

8. புராண வரலாறு

இத்தலத்தின் வரலாறு பதினெண் புராணத்தில் மகா கந்தபுராணத்தின் சேத்திர காண்டத்தில் உள்ளது. மொழிபெயர்த்துத் தமிழில் ஆக்கியவர் ஆராவமுதாசாரியார். இவரது வரலாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திருச்சுழியற் புராணம் முதற் சருக்கத்தில் கடவுள் வாழ்த்து, பாயிரம், நைமிசவனச்சிறப்பு, சூதர் புராண முறைத்த வரலாறு ஆகியவையுள்ளன. தலவிசேடச் சருக்கத்தில் தலப்பெருமைகள் தொகுத்து கூறப்பட்டுள்ளது. (தலைப்பெருமைத் தலைப்பில் காண்க).பூமிதேவி பூசைச் சருக்கத்தில், பூமிதேவியானவள் இரணியன், இரணியக் கண்ணன் என்னும் அரக்கர்களால் தீண்டப்பெற்ற பாவம் நீங்கத் திருச்சுழியலில் வந்து தன் பெயரால் ஒரு தீர்த்த முண்டாக்கி வழிபட்டுப் பாவம் நீங்கிய வரலாறு கூறப்படுகிறது. நான்காவது சருக்கத்தில் பராக்கிரம பாண்டியன் சாரன் என்கிற பிராமணனைக் கொலைசெய்த பாவத்தை இங்கே வந்து நீங்கப்பெற்றான் என்று,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறப்பட்டுள்ளது. ஐந்தாவது சருக்கம் பராக்கிரமவழுதி முத்திமா நகரம் உண்டாக்கிச்சீவன் முத்திபெற்றதைக் கூறும். ஆறாவது சருக்கம் இந்திரத்தும்நன் என்னும் பாண்டியனுக்காக, பிரளயம் வந்தபோது இத்தலத்தைத் திரிசூலத்தினால் தூக்கி நீர்நிலை மேல் நிலைநிறுத்தியதும் திரிசூலபுரம் எனப்பெயர் பெற்ற வரலாறும் கூறுகிறது.

ஏழாவது சருக்கம் சந்திரசேனபாண்டியன் காலத்தில் பிரளயம் வந்த போது சிவபெருமான் சூலத்தின் முனையை நாட்டிப் பூமிக்குள் ஒரு பிலம் உண்டாக்கிப் பிரளயத்தைச் சுழித்துப் புகச்செய்தனர் என்பது, திருச்சுழியல் என்ற பெயர் அதனால் ஏற்பட்டது. என்பதும் கூறும்.

எட்டாவது சருக்கம் கவுண்டின்ய முனிவர் தபசு செய்ததும், சிவபெருமான் அவர் பொருட்டுப் பாவகரிநதி அழைத்த வரலாறும், அந்நதிப்பெருமையும் கூறும்.

ஒன்பதாவது சருக்கம் கௌதமர் அகலிகையைச் சபித்த வரலாறும், பின் திருச்சுழியலில் திருநடனங்கண்டதும் அகலிகை சாப நீங்கிய பின் இருவரும் இங்கு வந்து திருமணக்கோலங் கண்ட வரலாறும் கூறும். (இஞ்ஞான்றும் பங்குனி மாதம் திருக்கல்யாணத்தன்று கவுதமர் அகலிகை திருவுருவங்களை எதிரே எழச்செய்து திருமணம் நடைபெறுவதைக் காணலாம்.)

பத்தாவது சருக்கம் சேரநாட்டரசன் மகள் மாலினி என்பவளை வேதாளம் பிடித்துக் கொள்ள, கோபில முனிவரது சொற்படி திருச்சுழியல் வந்து சூல தீர்த்தத்தில் மூழ்கி வேதாளம் பிடித்தது நீங்கப் பெற்றதும், வேதாளம் நல்லுருப் பெற்றுச் சென்றதும் ஆகிய வரலாறு கூறும்.

பதினோரவது சருக்கத்தில் பன்னக –சைலம் ஏற்பட்ட வரலாறு கூறப்பட்டிருக்கிறது. (பன்னக – சைலம் – பாறைக் குளம் கிராமத்திற்கு தெற்கேயுள்ள குன்று – திருச்சுழியலுக்கு மேற்கே ஒரு மைல். இங்கே குகைக் கோவில் உள்ளது. சுற்றுக்கோயில் எனுந் தலைப்பில் காண்க).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பன்னிரண்டாவது சருக்கத்தில் சித்துரத்துவசன் என்னும் கின்னரர் தலைவன் முற்கல விருடியின் மகள் சுப்பிரபைப்பூவையைத் தேர் மீது ஈர்த்துச்செல்ல, முற்கலரின் சாபத்தால் சித்துரத்துவசன் அரக்க உருவம் பெற்றுப்பின்னாள் அலைந்து திரிந்து திருச்சுழியலில் வந்து திருமேனிநாதரை வழிபட்டு நல்லுருப்பெற்றுச் சென்றான். என்ற வரலாறு கூறப்பட்டிருக்கிறது.

பதிமூன்றாம் சருக்கத்தில், நிசாகரன் என்னும் தவத் தோன் சிவபெருமானுக்காக குளநெல்லினின்றும் அரிசியைச் சேர்த்துச் சமைத்து நிவேதனமாக்கி வைத்துத் தியானத்தில் இருந்த பொழுது, சித்திரரூபன் என்னும் விஞ்சையன் கிளியுருவெடுத்து மேற்படி நிவேதனத்தை காலாற்கிளரியும் மூக்கினால் கட்டழித்தும் சிறகினாற் மண்ணைத் தூவியும் கெடுத்தனன். நிசாகரன் தியானம் நீங்கியபின் சித்திரரூபனைக் காட்டில் கிளியாகவே திரியும்படி சபித்து விட்டான் பின்னாள் கிளியுருவிலிருந்த சித்திரரூபன் திருச்சுழியல் வந்து வழிபட்டுப் பேறு பெற்றான் என்ற வரலாறு கூறப்பட்டிருக்கிறது.

பதினான்காம் சருக்கத்தில் திருச்சுழியலைச் சுற்றி ஏற்பட்டுள்ள அட்டலிங்கங்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. (சுற்றுக்கோயில்கள் என்ற தலைப்பில் காண்க).

பதினைந்தாம் சருக்கத்தில் அட்டதீர்த்தங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. (தீர்த்தங்களும் மேன்மைகளும் என்ற தலைப்பில் காண்க).

பதினாறாம் சருக்கத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு இறைவன் காளையாராகிக் காட்சி தந்த வரலாறு கூறப்பட்டுள்ளது.

தல பெயர் காரணம்

மஹாப்ரளய காலத்தில் சர்வலோகங்களும், சர்வபுவனங்களும், ஜலப் ப்ரளயமாக மாறி உலமே அழியும் தருவாயில் சிவபெருமான் தனது சூலாயுதத்தால் பெரிய துவாரம் உண்டாக்கி அதனுள் தண்ணீரை முழுவதும் புகச்செய்தார். அப்படி செய்யும் பொழுது இத்தலத்தில் சுவாமி சன்னதி முன்பாக தண்ணீர் முழுவதும் வலம் சுழித்து உள்ளே சென்றதனால் "சுழியல்" என்றும் அடைமொழி "திரு" என்பதனைச்சேர்த்தும் திருச்சுழியல் என வழங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. தல விருச்சம்

1. புன்னை, புன்னாகம், நாகம். புன்னை விருட்சம் மேற்கு ஆடி வீதியில் உள்ளது.

" வன்றாழியினஞ்சுண்ட பிரானிருத்தான் புன்னையக நீழல் "
– தல புராணம்.

2. அரசமரம், போதி, தருமதாவரம், அச்சுவத்தம், திருவரசு என வழங்கப்படும். " திருவரசு கண்டாரே தீ நரகுக் கண்டாரே" என்ற தல புராணச்செய்யுளும் காண்க. தரும மானது இங்கே தாவர வடிவாக யுகந்தோறும் முறையே நாவல், மா, மகிழ், அரசு விருட்சமாகக் கௌவைக்கடலருகே விளங்கும். கலியுகத்திலே அரசு வடிவாக விளங்குகின்றது. தாவர விநாயகன் என்னும் பெயரோடு யுகந்தோறும் தும்பி மாமுகனும் அமர்ந்துள்ளார். இப்போதுள்ள திருவரசு மரம் மிகப்பழமையானது. " வான் கண்டபோதி கண்டு " என்ற தலபுராணச் செய்யுளையும் நோக்குக.

10. வழிபட்டோர்

1. துணை மாலையம்மை

2. தேவர்கள்

1. திருமால்
2. பிரமன்
3. இந்திரன்
4. மன்மதன்
5. சூரியன்
6. சித்திரத்துவசன் (கின்னரர்தலைவன்)
7. சித்தரரூபன் (விஞ்சையன்)
8. நந்தீசுவரர்
9. பூமிதேவி
10. எண்ணில்லாத இமையோர்

" பெருவிமானத்து இமையோர் வணங்கு பெருந்திருச்சுழியல்
-பெரியபுராணம்.

3. முநிவர்

1. கவுண்டின்ய முநிவர்
2. காலவ முநிவர்
3. கண்ணுவ முநிவர்
4. கோபில முநிவர்
5. கௌதமர்
6. அகலிகை (கௌதமரின் மனைவி)
7. சதாநந்தர் (கௌதமரின் மகன்)
8. சூதர்
9. வாமதேவர்
10. சௌனகர்
11. நைமிசாரண்யமுநிவர்கள் பலர்

" தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன் " – தேவாரம் (தவர்-முநிவர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. அசுரர்

1. கிருதாந்தகன்

5. அரசர்

1. அர்ச்சுனன்
2. சித்திராங்கதை (அருச்சுனன் மனைவி)
3. ஏமரதன் (சேரன்)
4. சேரமான் பெருமாள் (சேரன்)
5. மாலினி (ஏமரதன் மகள்)
6. சோமசீதளன் (மாளுவதேசத்தரசன்)
7. ராஜராஜசோழன்
8. பராக்கிரம வழுதி (பாண்டியன்)
9. இந்திரத்துய்மனன் (பாண்டியன்)
10. சந்திரசேனபாண்டியன்
11. தத்தபாண்டியன்
12. பாண்டியர்
13. நாயக்கமன்னர்
14. சேதுபதிகள்

6. சமயாசாரியர்கள்

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. சுந்தரமூர்த்திசுவாமிகள்
4. மாணிக்கவாசகர்

7. நாயன்மார்

1. நின்றசீர் நெடுமாறன்
2. மங்கையர்க்கரசியார்
3. குலச்சிறையார்
4. திருநீலகண்ட யாழ்ப்பாணர்
5. சேரமான் பெருமாள்

8. சிவனடியார்

1. திருஞானசம்பந்தருடன் வந்த பதினாறாயிரம் அடியார்கள்
2. தீருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவி மதங்கசூளாமணி
3. குமரகுருபர சுவாமிகள்
4. எண்ணில்லாத சிவனடியாார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. சுற்றுக் கோயில்கள்

1. பள்ளிமடம் காளைநாத சுவாமி கோயில்

காளைநாதர் கோயில் எனவும் வழங்கும். கௌண்டிய நதியின் கிழக்கு கரையில் உள்ளது. சுவாமி பெயர் காளைநாதர், அம்மை பெயர் சொர்ணவல்லி தீர்த்தம் பாவகரிநதி, தினசரி பூஜை நடைபெறுகிறது. சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு இந்த இடத்திலேயே இறைவன் காளைப்பருவத்தினராய்க் காட்சி தந்தார். அவர் பள்ளிகொண்டிருந்தமையால் பள்ளிமடம் என வழங்கும். பதிகம் - "தொண்டரடித் தொழலும்" எனும் பதிகம்.

2. சுழியற் சொக்கம்மை கோயில்

இது ஊருக்கு வடக்கில் ஒரு குளக்கரையில் உள்ளது. மிகப் பழமையான கோயில். வடக்கு நோக்கிய சந்நிதியாக இருந்து, அம்மை பிரளய சப்தம் கேட்டுக் கீழ் திசையில் திரும்பியதால் தற்போது கிழக்கு நோக்கிய சந்நிதியாக இருக்கிறது. தினசரி பூஜை நடைபெறுகிறது.

3. மாரியம்மன் கோயில்

ஷை கோயிலுக்குத் தெற்கேயுள்ளது. தினசரி பூஜை நடைபெறுகிறது.

4. அங்காளம்மன் கோயில்

கீழரத வீதியில் திருமதிலை யொட்யுள்ளது. குருநாதன் கோயில் என்றும் பெயர். செங்குந்த மரபினரால் பூசிக்கப்படுவது. உற்சவ மூர்த்தி திருச்சுழியற் கோயிலில் இருக்கிறது. விசேட நாட்களில் பூஜை நிகழும், தீபாவளி,திருக்கார்த்திகை, சங்கராந்தி, சிவன் ராத்திரி நாட்களில் படித்தரம் கொடுக்கப்படுகிறது. (அங்காளநாயகியும் ஐயர் குருநாதருமே - குரவைப்பாட்டு 16)

5. வேலடி விநாயகர் கோயில்

கீழரத வீதியில் வடக்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியில் உள்ளது. தலபுராணத்தில் பாடல் பெற்றது. புராண ஆசிரியரின் வழிபடு கடவுள் என்று கூறவர். விநாயக சதுர்த்தி முதலிய நாட்களில் வழிபாடு நிகழும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. கார்த்திகையப்ப சுவாமி

இது மதுரைச்சாலையில் - திருச்சுழி இரயில் நிலையத்துக்கு வடக்கேயுள்ளது, சிவன்ராத்திரி, திருக்கார்த்திகை, சங்கராந்தி, தீபாவளி ஆகிய நாட்களில் படித்தரம் கொடுக்கப்படும்.

13. மருதப்ப ஐயனார்

மருதமரத்தோப்பில் இருந்தமையால் மருதாருடைய ஐயனார் என்றுங் கூறவர். திருச்சுழியல் கண்மாய்க்கரை தென்கோடியில் கரையின் உள்ளே உள்ளது. " ஏரியின் தலைதெக்கணத்தினில் ஐயனும்" எனத்தலபுராணம் கூறுகிறது. (செம்மல் மருதப்ப ஐயனாரொடு - பள்ளு 2.) மழைவேண்டி இம்மூர்த்திக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்துவர். வழிபாடு நிகழ்ந்த அன்றே மழை பெய்து கண்மாய் நிரம்பி வழிவது கண்கூடு.

14. வெள்ளை விநாயகர் கோயில்

இது கடைத்தெருவில் உள்ளது. நாடார் உறவின் முறையாருக்குச் சொந்தமானது. இக்கோயிலார் திருச்சுழியற் புராணத்தின் துதிப்பாடல்கள் அனைத்தையும்திரட்டி ஒரு நுலாக முன்பு வெளியிட்டுள்ளனர்.

15. கரையடி விநாயகர்

மதுரைச்சாலையில் கண்மாய்க்கரையில் உள்ளது. தனியார் ஒருவருடையது.

அஷ்டலிங்க கோயில்கள்

1. வெள்ளியம்பலநாதர் கோயில்

திருச்சுழியலுக்கு மேற்கே பாறைக்குளம் கிராமத்தருகே தெற்கேயுள்ளது பன்னக சைலம். இது திருச்சுழியலுக்குக் கிரியாகும். கயிலைமலைக் கொப்பானது. " சாரல் வெள்ளியங்கயிலையே பன்னக சைலம்" என வருந்தலபுராணச் செய்யுளையும் காண்க. இங்கு தத்த பாண்டியன் மலையைக்குடைந்து ஒரு குகைக் கோயிலைச் செய்து சிவலிங்கமமைத்து வெள்ளியம்பலநாதன் எனப்பெயரிட்டு வழிபட்டான். மேற்குப் பார்த்த சந்நிதி. மற்ற வரலாறுதல புராணம் பன்னகச் சருக்கத்தில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. தேரடிக்கருப்பண சுவாமி கோயில்

செல்வக்கருப்பணசுவாமி, சுவாமிதேர்நிலையத்தருகில் உள்ளது. உற்சவ காலங்களிலும் இரதாரோகணத்திற்கு முன் தினமும் சிறப்புவழிபாடு நிகழும், வெள்ளிக்கிழமைகள், சிவன்ராத்திரி, தீபாவளி, சங்கராந்தி, திருக்கார்த்திகை தினங்களில் படித்தரம் கொடுக்கப்படுகிறது.

7. ஊர்காவலப்ப சுவாமி கோயில்

இது மேற்கு ரதவீதிக்கும் நடுத்தெருவுக்கும் இடையிலுள்ள சந்தில் உள்ளது. ஊர் காவல் செய்யும் பைரவர் கோல மூர்த்தி.

8. வன்னியடிக் குஞ்சரம்

முற்காலம் மேற்கு ரத வீதியில் தென்மேற்கு மூலையில் மிகப்பெரிய வன்னிமரம் இருந்ததாகவும் அதன் கீழ் இருந்த விநாயகர் என்பவர். தற்போது தெற்கு கண்மாய்க் கரையில் உள்ளது. அருகில் அனுமார் கோயில் உள்ளது. (கொங்காரும் வன்னியடிக் குஞ்சரமும் - குரவை 16)

9. சேவகப்பெருமாள் கோவில்

இது கவுண்டின்ய நதிக்குச் செல்லும் கமுதிச்சாலையில் தென்னந் தோப்பருகேயுள்ள சாத்தா கோயிலாகும். (பாவகரித்துறையிற் சாத்தாவே - குரவை 1)

10. அரைக்காசம்மன் கோயில்

இதுவும் கமுதிச்சாலையின் வடபுறமுள்ளது. வழிபடுவோர்க்குக் கண்கண்ட பலனளிப்பது. இங்கிருந்து தான் தினசரி திருமஞ்சனத்தை விருதுகளுடனும், நாதசுர முழக்கத்துடனும் அழைத்து வருதல் வழக்கமாயுள்ளது.

11. துரௌபதையம்மன் கோயில் (தனியார் கோயில்)

இது வடக்கு ரத வீதியும் மேற்குரதவீதியும் சந்திக்கும்மிடத்தில் ஆறாந்திருநாள் மண்டபத்துக்கு வடக்கிலுள்ளது. வயலக வேளாளர்களுடையது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. கார்த்திகையப்ப சுவாமி

இது மதுரைச்சாலையில் - திருச்சுழி இரயில் நிலையத்துக்கு வடக்கேயுள்ளது, சிவன்ராத்திரி, திருக்கார்த்திகை, சங்கராந்தி, தீபாவளி ஆகிய நாட்களில் படித்தரம் கொடுக்கப்படும்.

13. மருதப்ப ஐயனார்

மருதமரத்தோப்பில் இருந்தமையால் மருதாருடைய ஐயனார் என்றுங் கூறவர். திருச்சுழியல் கண்மாய்க்கரை தென்கோடியில் கரையின் உள்ளே உள்ளது. " ஏரியின் தலைதெக்கணத்தினில் ஐயனும்" எனத்தலபுராணம் கூறுகிறது. (செம்மல் மருதப்ப ஐயனாரொடு - பள்ளு 2.) மழைவேண்டி இம்மூர்த்திக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்துவர். வழிபாடு நிகழ்ந்த அன்றே மழை பெய்து கண்மாய் நிரம்பி வழிவது கண்கூடு.

14. வெள்ளை விநாயகர் கோயில்

இது கடைத்தெருவில் உள்ளது. நாடார் உறவின் முறையாருக்குச் சொந்தமானது. இக்கோயிலார் திருச்சுழியற் புராணத்தின் துதிப்பாடல்கள் அனைத்தையும்ந்திரட்டி ஒரு நுலாக முன்பு வெளியிட்டுள்ளனர்.

15. கரையடி விநாயகர்

மதுரைச்சாலையில் கண்மாய்க்கரையில் உள்ளது. தனியார் ஒருவருடையது.

அஷ்டலிங்க கோயில்கள்

1. வெள்ளியம்பலநாதர் கோயில்

திருச்சுழியலுக்கு மேற்கே பாறைக்குளம் கிராமத்தருகே தெற்கேயுள்ளது பன்னக சைலம். இது திருச்சுழியலுக்குக் கிரியாகும். கயிலைமலைக் கொப்பானது. " சாரல் வெள்ளியங்கயிலையே பன்னக சைலம்" என வருந்தலபுராணச் செய்யுளையும் காண்க. இங்கு தத்த பாண்டியன் மலையைக்குடைந்து ஒரு குகைக் கோயிலைச் செய்து சிவலிங்கமமைத்து வெள்ளியம்பலநாதன் எனப்பெயரிட்டு வழிபட்டான். மேற்குப் பார்த்த சந்நிதி. மற்ற வரலாறுதல புராணம் பன்னகச் சருக்கத்தில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. கல்யாணசுந்தரர்

திருச்சுழியலுக்கு வடக்கே கவுண்டின்ய நதியோடு மற்றொரு உபநதி வந்து கலக்கிறது. அவ்விரு நதியின் மத்தியில் கவுதம முனிவர் ஒரு சிவலிங்கத் தாபித்துக் கல்யாணசுந்தரர் எனப் பெயரிட்டு வழிபட்டார். இன்றும் இவ்லிங்கத்தைக் காணலாம். துலா மாதத்தில் இரு நதியும் சேருமிடத்தில் மூழ்குவர். இப்பெருமானை வழிபடுவர்.

3. காலவலிங்கம்

திருச்சுழியலுக்கு வடக்கே ஆமைக்குளம் பொட்டலுக்கும் வடக்கேயுள்ளது. காலவ இருடி தாபித்த லிங்கமாகும். இதனருகில் ஓடும் ஓடையே காலவ தீர்த்தமாகும்.

4. சோமசேகரர்

திருச்சுழியலுக்கு வடகிழக்கில் அஞ்சானைக்குத்திக் கிராமம் கண்மாயில் உள்ளது. சந்திர சேனபாண்டியன் தாபித்தான். இங்கேயுள்ள தீர்த்தம் திரிநயன தீர்த்தமாகும்.

5. கண்ணுவலிங்கம்

திருச்சுழியலுக்கு கிழக்கே சப்பாணி ஏந்தல் கண்மாய்க்குத் தெற்கேயுள்ளது. கண்ணுவ முனிவர் தாபித்து வழிபட்டது. இங்கு உள்ள தீர்த்தம் கண்ணுவ தீர்த்தமாகும்.

6.காமீச்சுரலிங்கம்

திருச்சுழியுலுக்குத் தென் கிழக்கில் இலுப்பையூர் கிராமத்தருகே பாவகரி நதியின் தென் கரையில் உள்ளது. காமனாகிய மன்மதன் தாபித்து வழிபட்ட லிங்கமாகும்.

7.கிருதாந்தேசுவரர்

திருச்சுழியலுக்குத் தெற்கே ஆலடிபட்டி கிராமம் உள்ளது. இதற்கு வடக்கே கண்மாய்கரையில் காமாட்சியம்மன் கோயிலில் உள்ளது. காமாட்சியம்மன் கருவறையில் கீழே ஒரு அறையுள்ளது. இவ்வறையில் உள்ள சிவலிங்கமே கிருதாந்தேசுவரர். கிருதாந்தகன் என்ற அசுரன் தாபித்து வழிபட்டது. இவ் லிங்கத்துக்குச் சிவராத்திரி யன்று மட்டும் இரவில் பூஜை நடைபெறுகிறது. காமாட்சியம்மன் கோயிலுக்கு திருச்சுழியற் கோயிலிலிருந்து நித்தியப் படித்தரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படித்தரம் கொடுக்கப்படுகிறது நடுத்தெருச் சைவவேளாளர்கள் குல தெய்வமாகக் கொண்டாடுவது. மாசிமாதம் சிவராத்திரிப்போது பாரிவேட்டை விழாச்சிறப்பாக நிகழ்த்துவர்.

8.தினகரேச்சுவர லிங்கம்

அருப்புக்கோட்டைச் சாலையில் குலசேகர நல்லூரில் உள்ளது. இக்கோயிலைச்சேர்ந்த விநாயகர் கோயில் சாலையின் வடபுறமுள்ளது. சூரியன் தாபித்து வழிபட்டது. கோயில் மிகப்பழமையானது. கல்லெட்டுகளும் உள்ளன. வன்னியர்கள் பூஜித்தனராம். காரில் செல்பவர்கள் விநாயகரையும் இக்கோயிலையும் வணங்கிக்கொண்டு செல்வர்.

மற்ற வரலாறு சுழியற் புரபாணம் அட்டலிங்கச் சருக்கத்திற் காணலாம்.

மடங்கள்

1. திருநாவுக்கரசு சுவாமி மடம்

இது மேலைத்தேர் தெருவிலுள்ளது. வேளாளர்கள் திருநாவுக்கரசரது குருபூசையை நடத்துகின்றனர்.

2. அறுபத்துமூவர் மடம்

அருப்புக்கோட்டைச் சாலையில் இருந்தது கிலமாகி விட்டதால், தி.அ.சு.அ. விடுதியில் தி.அ.சு.அ. வகையார் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

3. சுந்தர மந்திரம்

வடக்கு கார்த்திகை வீதியில் உள்ளது. திருவண்ணாமலையிலிருந்த ஸ்ரீ ரமணமகரிஷிகளின் பிறந்த இல்லம். அவரது பிதாவின் பெயரால் ஏற்படுத்தப்பட்டது. ரமண மகரிஷிகள் இங்கு தோன்றினமையினால் மேலை நாட்டிலும், திருச்சுழியற் பெருமை தெரியலாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. மல்லம்பட்டியார் மடம்

கீழைத்தேர் தெருவிலுள்ளது. தண்ணீர்ப்பந்தல் மடம் என வழங்கும்.

5. துவாதசிக் கட்டளை மடம்

தெற்குதேர் தெருவியுள்ளது. ஏர. வெங்கடபதி நாயக்கர் (சுமார் கி.பி. 1660) இக்கட்டளைக்கு கோணப்பனேந்தல் என்ற கிராமத்தை விட்டுக்கொடுத்துள்ளார்.

6. பசு மடம்

அருப்புக்கோட்டைச் சாலையில் இருந்து கிலமாகிவிட்டது.

சத்திரங்கள்

1. பிடாரிச்சேரி சத்திரம்

இது வடக்குக்கார்த்திகை வீதியில் உள்ளது.

2. மல்லாங் கிணறுச் சத்திரம்

இது கீழைத்தேர் தெருவில் உள்ளது. முற்காலம் இரண்டு சத்திரத்தில்லும் அடியார்கட்கு அன்னம் பாலிப்பு நடைபெற்று வந்தது.

நந்தவனங்கள்

1. பூமி நந்தவனம்

இது கோயிலுக்கு எதிரே யானை மாலுக்குக் கிழக்கே பூமி தீர்த்தத்தினருகேயுள்ளது.

2. எழுவடி நந்தவனம்

இது அருப்புக்கோட்டைச் சாலையில் தி.அ.சு.அ. விடுதிக்குத் தென் பகுதியிலுள்ளது.

3. தமிழ்ப்பாடி நந்தவனம்

இது மிகப்பெரிய நந்தனவனமாகும். தமிழ்ப்பாடி கிராமத்தருதே திருச்சுழிக் கண்மாய் முடியும் இடத்திற்கு கிழக்கே இருந்தது. பழைய சிவஸ்தல மஞ்சரிகளில் இந் நந்தவனத்தைக் குறித்திருக்கிறார்கள்.

(இவை யாவும் சமீப காலத்தில் மறைந்து விட்டன) தற்போது தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள நந்தவனமும் கோயிலுக்குள்ளே வடக்கு ஆடிவீதியிலுள்ள நந்தவனமுமே தற்போதுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டபங்கள்

1. தவசு மண்டபம்

இது வேலாயுத சுவாமி என்பவரால் சுமார் 200 வருடங்கட்கு முன்பு பாவகரி நதிக்கு வடக்கில் கட்டப்பட்டு இருந்தது. அது இடிந்து விட்டதால் அம் மண்டபத்தைப் பிரித்து வந்து பாவகரி நதிக்கு மேற்கேசந்நிதிக்குக் கிழக்கே தற்போதுள்ள இடத்தில் தேவஸ் தானத்தாரால் கட்டப்பட்டது. தற்போது ஆடி தவசுதினத்தில் அம்பாள் இம் மண்டபத்திலேயே எழுந்தருளி இருப்பது வழக்கம்.

2. இரண்டாந் திருநாள் மண்டபம்

வடக்கு ரதவீதியின் வடமேற்கு மூலையில் தெற்கு நோக்கியுள்ள மண்டபம் ஆசாரியார்களின் பொது மண்டபம். இதில் இரண்டாந் திருநாள் குதிரைவாகன மண்டகப்படியைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

3. ஆறாந்திருநாள் மண்டபம்

மேலரத வீதியின் வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கியுள்ள மண்டபம். தானக்கணக்குச் சுந்தரலிங்கம் பிள்ளையவர்களால் கொடுத்த பணமும், தேவஸ்தானப் பணமும் சேர்ந்து 1896ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. (முன்பு இருந்த மண்டபம் இடிந்து விடடதால் அதை அப்புறப்படுத்தப்பட்டது) தானக்கணக்கு பரம்பரையில் சுந்தரலிங்கம் பிள்ளை குடும்பத்தினர் ஆறாந்திருநாள் மண்டபத்தைச் சிறப்புற நடத்தி வருகின்றனர். திருப்பணிச் செல்வர் தி.அ.சு. அண்ணாமலை செட்டியார் அவர்கள் மேற்பார்வையில் கட்டப்பட்ட இம் மண்டபத்தின் மொத்த செலவு ரூ. 2548 - 3 - 5 பைசா ஆகும்.

4.திருக்கல்யாண மண்டபம்

இம் மண்டபம் ஆஸ்தான மண்டபத்துக்கு வடக்கே வடக்கு வாசலையொட்டி கிழக்கு நோக்கியுள்ள மண்டபமாகும். முற்காலம் இம் மண்டபத்தில்தான் திருக்கல்யானம் நடைபெற்று வந்தது. (தற்போது திருக்கல்யாணம் ஆஸ்தான மண்டபத்துக்கு தெற்கேயுள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது.) இம்மண்டபம் முத்துவிஜய ரகுநாத சேதுபதி (கி.பி 1763 - 1772) அவர்களால் கட்டப்பட்டது. தற்போது திருப்புகழ்ச் சபையுள்ளது. இச்சபை நந்தன வருடம் சித்திரை மாதம் 18ம் தேதி முதல் நடைபெற்றுவருகிறது. திரு.கு. முத்தையா பிள்ளை இச்சபையை நன்கு நடத்தி வருகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. சிற்பங்கள்

1.முத்திருளாயி அம்மாள் 3.ஆண்டியணன் சேர்வை
2.முத்துக்கருப்பன் சேர்வை 4.வேலாயுத சுவாமி

இவர்களது உருவம் சுவாமி கோயில் கம்பத்தடி மண்டபம் தென்பகுதி தூண்களில் உள்ளன.

5.தாசி திருவுமுத்திருளி

அம்மன் கோயில் கம்பத்தடி மண்டபம் வடபகுதி தூணில் உள்ளது. மூச்சுப்பிடிப்பு அம்மன் என்றுங் கூறவர். இன்றும் மூச்சுப்பிடிப்பு உள்ளவர் இவ்வம்மையைச் சுற்றி வந்தால் பிடிப்புவிடுவது கண்கூடு.

6.அண்ணாசாமி சேதுபதி (கி.பி.1807 - 1820)

ஷி மண்டபம் தென்பகுதி தூணில் இவரது உருவம் உள்ளது.

7.எர.வெங்கடபதி நாயக்கர் (சுமார் கி.பி. 1660)

அம்மன் கோயில் பள்ளியறைக்கு எதிரேயுள்ள தூணில் உள்ளது.

தவிர தூண்களில் அநேக சிற்ப வடிவங்கள் உள்ளன. சுவாமி கோவில் உட்பிரகாரம் மேற்பகுதி முழுவதும் வர்ணப்பூச்சுச் செய்யப்பெற்றுளளது.

நடராசரது உருவம் சிலையாலமைந்தது

14. தினப் பூசைகள்

தினந்தோறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. காரணம் காமீகம் என்ற சிவாகமங்களின் முறைப்படி இங்கு பூசைகள் செய்யப் படுகின்றன.

1. திருவனந்தல் காலை	மணி	4-6 (திப்பள்ளியெழுச்சி)
2. விளாபூசை		6-7
3. காலை சந்தி		8-10
4. சிறு காலை சந்தி		10-11
5. உச்சிக்காலம் பகல் மணி		11-12
6. சாயரட்சை மாலை		4-6
7. அர்த்தசாமம்		8-9
8. பள்ளியறை		9-10

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கால சந்தியிலும் சாயரட்சையிலும் ஸ்ரீ பலிநாயகர் (நித்யோற்சவர்) வலம் வருதல் நடைபெறும்.

பிரதான பூசைகள் கம்பத்தடி விநாயகர் சந்நிதியில் தொடங்கி திருவரசு விநாயகர் பூசையுடன் முடிவுறும். விளாபூசைக்குப்பின் தினமும் கௌண்டின்ய நதியிலிருந்து இரண்டு வெள்ளிக்குடங்களில் யானை மீது திருமஞ்சனம் கொண்டுவரப்படும்.

மாத விசேடங்கள்

1. மாதப்பிறப்பு :- சிறப்பு வழிபாடு நிகழும், மாலையில் சந்திரசேகரர் புறப்பாடு.

2. சோமவாரம் :- சாயரட்சையில் சிறப்பு வழிபாடு.

3. சுக்கிரவாரம் :- இரவு அம்பாளுக்கு இரட்சா பந்தனம் செய்து பல்லக்கில் கார்த்திகை வீதியில் அம்பாள் உலா வருதல்.

4. அமாவாசை :- காலையில் சுவாமி கவ்வைக்கடலில் தீர்த்தம் கொடுத்தல். மாலையில் சந்திரசேகரர் எழுந்தருளுதல். (உட்பிரகாரம்)

5. கார்த்திகை :- இரவு வள்ளி தேவயானை இருபுற முடைய சுப்பிரமணிய சுவாமிக்கு இரட்சா பந்தனம் செய்து மயில் வாகனத்தில் கார்த்திகை வீதியில் எழுந்தருளுதல்.

6. திருவாதிரை :- நடராசரது உற்சவ மூர்த்தியை மூல நடராசர் சந்நிதியில் எழச்செய்து அபிடேகம், சிறப்பு வழிபாடு நிகழும். இங்கு மாதவாரி வரும் திருவாதிரை தில்லையின் மார்கழித் திருவாதிரைக்குறிய சிறப்புடையது. [கௌதமச் சருக்கம் செய்யுள் 45 காண்க.]

7. பிரதோடம் :- சந்திரசேகரர் சிறிய இடபத்தில் எழுந்தருளி நடுப்பிரகாரம் வழியாக மூன்று முறை வலம் வந்து வழிபாடாகி இடபதேவருக்கு [நந்தி என்று சொல்லப்படும்] சிறப்புவழிபாடு நிகழும். பின்பு சாயரட்சை நிகழும் சனிப்பிரதோட காலங்களில் சிறிய வெள்ளி இடபத்தில் சுவாமி எழுந்தருளுதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருட விசேடங்கள்.

1. சித்திரை விசு : - (தமிழ் வருடப்பிறப்பு) மாலையில் கம்பத்தடி மண்டபத்தில் பஞ்சாங்கம் வாசித்தல் நடை பெறும். இரவு சுவாமி அம்மைக்கு இரட்சாபந்தனமாகி சப்பரத்தில் தேர் வீதியில் உலா வருதல் நிகழும்.

2. சித்திரா பௌர்ணமி : - இரவு சுவாமி அம்மை தேர்வீதியில் உலா வருதல்.

3. திரு ஆடிப்பூரம் : - அம்மைக்கு இரட்சாபந்தனமாகி ஊஞ்சல் ஆடிப்பின் தேர் வீதியில் எழுந்தருளுதல்.

4. விநாயக சதுர்த்தி : - பிருதிவி விநாயகருக்குச் சிறப்பு வழிபாடும் மற்றும் எல்லா விநாயகர் சந்நிதிகளிலும் சிறப்பு வழிபாடும் இறுதியில் யானை வழிபாடும் நிகழும். இரவில் சிறிய வெள்ளி இடப வாகனத்தில் விநாயகர் தேர் வீதியில் எழுந்தருளல்.

5. ஆவணி மூலம் : - [பிட்டுத் திருவிழா] மாலையில் சுவாமி அம்மன் சப்பரத்திலும், சொக்கர் [அர்ச்சகர்] பல்லக்கிலும், பாண்டிய அரசர் [அர்ச்சகர்] யானையிலுமாக பாவகரி நதிக்குச் சென்று பிட்டுக்கு மண்சுமந்த லீலை நடந்து தீபாராதனை முடிந்து அப்பால் தேர் வீதியில் எழுந்தருளல் [வாணியர் மண்டபம் நடத்தினால் இடபத்தில் எழுந்தருளல்.]

6. திருமலைச் சனிவாரம் : - புரட்டாசி*மீ* சனிக்கிழமை தோறும் சுழிகைக் கோவிந்தருக்குச் சாயரட்சையில் சிறப்பு வழிபாடு நிகழும்.

7. நவராத்திரி : - அம்பாள் சந்நதியில் ஒன்பது நாளும் அம்மை பல கோலத்தில் கொலுவீற்றிருத்தல் நடை பெறும். மூலத்தான அம்மைக்குச் சிறப்பு வழிபாடும் சகச்சிரநாம அருச்சனை வழிபாடும் நிகழும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. சரசுவதி பூசை : - கோயில் கணக்குப் புத்தகங்கள் ஆயுதங்கள் இவைகளை சபா மண்டபத்தில் வைத்து உச்சிக் காலத்தில் சிறப்பு வழிபாடு நிகழும்.

9. விசய தசமி : - [மானம்பு] மாலையில் சுப்பிரமணியர் குதிரை வாகனத்தில் பாவகரி நதிக்கெழுந்தருளி அம்புபோடும் லீலை நடந்து அப்பால் தேர் வீதியில் எழுந்தருளுதல்.

10. ஐப்பசி விசு : - இந்த மாத முழுவதும் காலையில் அம்பாள் சந்நிதி பள்ளியறை மண்டபத்தில் துலா காவேரி புராண விரிவுரை நடைபெறும். மக்கள் பாவகரி நதியில் தினமும் துலா முழுக்குச் செய்து பக்தியுடன் துலா மான்மியத்தைக் கேட்பர்.

11. தீபாவளி : - தீபாவளியன்று காலை எல்லா மூர்த்திகட்டும் புத்தாடை சாத்தப்படும். சிறப்பு வழிபாடு நிகழும்.

12. கந்தசட்டி : - வள்ளி தேவயானை இருமருங்குடைய சுப்பிரமணிய சுவாமிக்கு இரட்சாபந்தனமாகி மயில்வாகனத்தில் தேர்வீதி வலம் வந்து பின் ஆத்தான மண்டபம் வடபுறம் சூரசம்கார லீலை நடந்து அதன்பின் கோயில் சேர்தல். [செட்டியார்கள் மண்டபம் நடத்தினால் சிறப்பு வழிபாடும் 6 நாளும் புறப்பாடுநிகழும்.]

13. கார்த்திகைச் சோமவாரம் : - கார்த்திகை மாதம் ஒவ்வொரு சோமவாரமும் சாயரட்டைக்கு முன் சோமவாரச் சிறப்பு வழிபாடு நிகழும்.

14. திருக்கார்த்திகை : - கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி திதியோடு கூடிய கார்த்திகை நட்சந்திரத் தன்று மாலை கோவில் முழுவதும் லட்ச தீபம் போடப்படும். இரவில் சுவாமி அம்மை, விநாயகர், சுப்பிரமணியர்,சண்டேசருடன் புறப்பாடாகி கீழைத்தேர் தெருவில் "சுட்கப்பனை" கொளுத்தி, தீபாராதனையாகி அப்பால் தேர் வீதியில் எழுந்தருளல் நடைபெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. தனுர் மாத பூசை :- மார்கழி மாத முழுவதும் திருப்பள்ளி யெழுச்சிச் சிறப்பு வழிபாடு நிகழும். கிராமக் கோயில்கள் யாவற்றிலும் திருப்பள்ளி யெழுச்சி பூசை நடைபெறும். கன்னிப்பெண்கள் கவ்வைக்கடல் குளத்தில் புலர் காலை நீராடிப் பார்வதி தேவியைக் குறித்துப் பாவை நோன்பு நோற்பர்.

16. ஆருந்திரா தரிசனம் :- மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்தன்று அதிகாலை மூலத்தான நடராசருக்கு சிறப்பு அபிடேகமும் வழிபாடும் நிகழும்.

17. திருவாதிரை :- மார்கழி மாதத் திருவாதிரை யன்று இரவு அம்பாளுக்கு ஊஞ்சல் உற்சவமாகி அதன் பின்தேர் வீதியில் எழுந்தருளல் நடைபெறும். [மணிவாசகர் விழா உற்சவம் என்ற தலைப்பில் காண்க.]

18. சங்கராந்தி :- [உத்தராயண புண்ய காலம்.] நவபாண்டத்தில் பொங்கலிட்டு உச்சிகாலத்தில் சிறப்பு வழிபாடு நிகழும்.

19. தைப்பூசம் :- உச்சிகாலத்தில் சுவாமி அம்பாளுக்குச் சிறப்பு வழிபாடு மாலை சுவாமி அம்பாள் தேர் வீதியில் எழுந்தருளல் நடைபெறும்.

20. மாசி மகம் :- கும்பகோணத்தில் பன்னிரெண்டு ஆண்டுக்கொரு முறையே மகாமகம் வரும். திருச்சுழியலில் ஒவ்வொரு ஆண்டுமகமும் மகாமகச்சிறப்புடையது. கவ்வைக் கடல் குளத்தில் ஒவ்வொரு மாசி மாதத்திலும் சுக்கிலபட்சப் பௌர்ணமி வரை நீர் பொங்கிக் கொண்டே வந்து பின் தினந்தோறும் சிறிது சிறிதாக இறங்கி பழைய நிலைக்கு வருதல் கண்கூடு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்று காலை சுவாமியும் அம்மையும் கவ்வைக்கடல் முன் சப்பரத்தோடு கூடிய இடப வாகனத்தில் எழுந்ருளி மகத்தீர்த்தம் கொடுத்தல் நிகழ்ந்து தேர் வீதியில் எழுந்தருளல் நடைபெறும். "பேதியாக்குடந்தை வாவி தன்னினும் பெருமைத் தாமால்" - தலபுராணம்.

[தற்போது வைகாசி மாதம் விசாகத்தன்று திருப்புகழ்ச் சபையினர் பாற்குடம் எடுத்து வந்து நாயக மண்டப பிரகாரத்தில் உள்ள சுப்பிரமணியர் மூர்த்திக்கு சிறப்பு வழிபாடு நிகழ்த்துகின்றனர் திருப்புகழ்ச் சபைக்கு சுப்பிரமணியரை எழச்செய்து இரவு தேர் வீதியுலா வருதலும் நடைபெற்று வருகிறது]

15. திருவிழாக்கள்

1. ஆடித்தவசுத் திருநாள் :- இது ஆடி மாதம் நிகழும் அம்மை திருநாள். ஆடிப்பூரத்திருநாள் என்றும், முளைக் கொட்டுத் திருவிழா என்றும் கூறுவர். 10 நாட்கள் நடைபெறும் 10ம் நாள் காலை அம்பாள் தவக்கோலத்தில் பாவகரி நதிக் கெழுந்தருளித் தீர்த்தம் கொடுத்து தவசு மண்டபத்தில் தவக்கோலத்தில் வீற்றிருத்தல். மாலையில் சுவாமி இடப வாகனரூடராய் எழுந்தருளி பாவகரி நதியில் காட்சி கொடுத்த லீலை நிகழும் இத்திருவிழாவுக்கே மக்கள் அதிகம் கூடுகின்றனர். பின் தவசு மண்டபம் வந்து அபிடேக ஆராதனை முடிந்து சுவாமி அம்மை இருவரும் வெள்ளி இடப வாகனத்தில் தேர் வீதியில் எழுந்தருளல் நடைபெறும்.

[துணைமாலையம்மை திருச்சுழியலிலே தவஞ்செய்து சுவாமியைத் திருக்கல்யாணம் செய்து கொண்டதாக சிவஸ்தல மஞ்சரிகளில் குறித்துள்ளார்கள். ஆனால் திருச்சுழியற் புராணத்தில் இதுபற்றிய செய்திகள் இல்லை. ஆனால் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் "மலைமகளை விரதயோக நெறி நின்று மணந்தார் சுழியல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியநகர்" என்று குறிக்கின்றார். "மலையான்மகள் மடமாதிட மாகத்தவன் மற்று" என்ற திருச்சுழியல் தேவார உரையும் காண்க.]

2. மாணிக்கவாசகர் திருநாள் :- [திருவெம்பாவைத் திரு நாள்] இது மார்கழி மாதம் திருவாதிரை ஈறக 10 நாள் காலையில் நடைபெறுவது. காலையில் மணிவாசகரைச் சப்பரத்தில் எழுந்தருளச் செய்து நவ சந்திகளிலும் ஒன்பது திருவெம்பாவைப் பாடல்கள்ஓதி இறுதிப்பாடல்கள் முழுவதும் நடராசர் சந்நிதியில் ஓதப்பெறும். திருவெம்பாவை சத்தியை வியந்தது என்னும் பதிகம் சிருஷ்டி உலகைப் படைக்கத் தொடங்கும் அவசரம் திருப்பள்ளி எழுச்சி எனப்படும். அதற்கு முன்பு சத்திகள் காரியப்படலால் திருவாதிரை ஈறாக உள்ள நாட்களை படைப்புக்கு முற்பட்ட கால மாக கருதி நவசத்தியைப் பிரேரிக்கும் காலமாகக்கொண்டு அச்சத்தியை வியக்கும் திருவெம்பாவைப் பாசுரங்களை மட்டும் ஓதுதல் வழக்கம். உலகைப்படைத்த பின்பே உலகர் பொருட்டு இறைவன் வேதாகமங்களைச் செய்தருளினான். படைப்புக்கு முற்பட்ட காலத்தில் அவையிற்றைச் செய்ய வில்லை என்ற குறிப்பைப் புலப்படுத்தவே திருவெம்பாவைக் காலத்தில் வடமொழி வேதாகமங்களையும் தமிழ்த் தேவாரமாதி திருமுறைகளையும் காப்பிட்டு வைத்து விட்டு திருவெம் பாவை மட்டும் ஓதுதல் நீண்டநாள் வழக்கில் உள்ளது. இக்காலம் வடமொழி வேதாகமங்களும் திருமுறைகளும் யாண்டும் ஓதுவது வழக்கின் கண் இல்லை. இதையறியாதார் பலம்டக்கூறுவர்.

3. தைப்பூசத் திருநாள் :- தை மாதம் நிகழ்வது. பழநிக்குமார சுவாமி திருநாள் என்றுங் கூறுவர். 10 நாள் நடைபெறுவது. 8ம் நாள் வள்ளி தேவயானை திருக்கல்யாணம் நிகழும். தைப்பூசத்தன்று தேர் திருவிழா நடைபெறும். அன்று இரவு சுவாமி அம்பாள் தேர் வீதியில் எழுந்தருளலும் நடைபெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. மாரியம்மன் திருநாள் ;- மாசி மாதம் பூர்வபட்சம் பௌர்ணமி ஈறாக 10 நாள் நடைபெறும். கொடியேற்றாமும்தேர்த் திருவிழாவும் இரவில் நடைபெறும். தேர் திருவிழாவன்று கிராம மக்கள் யாவரும் பொங்கலிட்டுச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்துவர். [அக்கினிச் சட்டி கரகம் முதலியன நடைபெறும்.]

5. சுழியற் சொக்கம்மை திரு நாள் ;- மாசி மாதம் அமர பட்சத்தில் நடைபெறும் 10 நாள் விழாவாகும் . கொடியேற்றமும் தேர் விழாவும் இரவில் நடைபெறும். தேர் திருவிழாவன்று கிராம மக்கள் பொங்கலிட்டு மகிழ்வர்.

[முற்காலம் பிடாரி உற்சவம் என வழங்கப்பட்டிருக்கிறது.]

6. பங்குனிமாதப் பெருந் திரு நாள் :- பங்குனி பிரம்மோற்சவமாகும். உத்திரம் ஈறாக 10 நாள் நடைபெறுவது.

முகூர்த்தக்கால் :- திருவிழாத் தொடங்கு முன் ஒரு நல்ல நாளில் முகூர்த்தக்கால் கோள் விழாச்செய்தல்.

வாஸ்து சாந்தி :- கொடியேற்றத்திற்கு முதல் நாள் இரவில் செய்வது.

கொடியேற்றம் முதல் திருநாள் :- காலையில் கொடியேற்றமும், மாலையில் சுவாமி நந்தீஸ்வர வாகனத்திலும், அம்மை சிம்மவாகனத்திலும் தேர் வீதியில் பவனி வருதல்.

இரண்டாந் திரு நாள் ;- காலையில் சுவாமி அம்பாள் கேடகத்திலும், மாலையில் 2ம் திருநாள் மண்டபத்திற்கு எழுந்தருளிஅபிடேக ஆராதனையாகி அப்பால் குதிரை வாகனத்தில் எழுந்தருளல்.

[மண்டபம் என்ற தலைப்பில் காண்க.] கேடகம் - சப்பரம்.

மூன்றாந் திருநாள் :- சுவாமியம்பாள் காலை மாலை கேடகத்தில் எழுந்தருளல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்காந் திருவிழா : - சுவாமியம்பாள் காலை பல்லக்கிலும், இரவு பூத வாகனம் அன்ன வாகனங்களில் பவனி வருதல்.

ஐந்தாந் திருவிழா : - சுவாமியம்பாள் காலை பல்லக்கிலும், இரவு கற்பக விருட்சம் காமதேனு வாகனங்களில் பவனி வருதல்.

ஆறந் திருவிழா : - காலை பல்லக்கில் உலா பின் அம்பாள் ஆறுகாற் பீடத்தில் திருஞானசம்பந்தப் பெருமானை எழச்செய்து ஞானப்பால் ஊட்டியருளிய லீலை நிகழும். பின்பு சுவாமியும் அம்பாளும் ஆறந்திருநாள் மண்டபத்திற்கு எழுந்தருளித் தங்கல். இரவு அபிடேக அலங்கார தீபாராதனையாகி வெள்ளி இடப வாகனங்களில் புறப்பாடு அங்காளம்மன் கோயில் முன்பு திருஞானசம்பந்தர் சைவ சமயத்தை மீண்டும் நிலைபெறச்செய்த வரலாற்று லீலை நிகழும். அப்பால் வீதியில் எழுந்தருளுதல்.

[மண்டபம் என்ற தலைப்பில் காண்க.]

ஏழாந் திருவிழா : - சுவாமியம்பாள் காலை பல்லக்கிலும் இரவு கைலாச பருவதம், சேட வாகனங்களில் பவனி வருதல்.

எட்டாந் திருவிழா : - காலை கேடகத்தில் உலா வந்து ஆத்தான மண்டபத்தில் ஊடல் மாலை லீலை நடைபெறும். ஸ்ரீ பண்டாரக் கணக்கு ஸ்தானக் கணக்கர்கட்குப் பரிவட்டம் கட்டி அவர்கள் பட்டயம் வாசித்தல் நிகழும் மாலை கன்னி ஊஞ்சல் மண்டபமாகி திருக்கல்யாண மண்டபத்தில் திருக்கல்யாணம் நடைபெறும் அவ்வமயம் கவுதமர் அகலிகையையும் நேரே எழுந்தருளச்செய்து திருக்கல்யாண வைபவம் நிகழும் இரவு சுவாமி யானை வாகனத்திலும் அம்மை புட்பபல்லக்கிலும், எழுந்தருளல்.

[தற்போது சீர்பண்டாரக் கணக்கு என்றும் தானக் கணக்கு என்றும் கூறுவர். சுவடியில் ஸ்ரீ பண்டாரக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணக்கு என்றும் ஸ்தானக் கணக்கு என்றும் குறித்துள்ளனர். தவிர ஊடல் மாலையை மட்டையடி உற்சவம் என்றும் கூறுவர். இதன் பொருளை பிரணயகலக வர்ணனம் என்ற நூலில் காணலாம்.]

ஒன்பதாந் திருவிழா :- தேர்த்திருவிழா காலையில் ஐந்து தேர்களும் புறப்பட்டுத் திருவீதி வலம் வந்து சேர்தல். இரவு தேர்த்தடம் பார்த்தல் கேடகத்தில் எழுந்தருளல். [ஐந்து ரதத்திருவிழாத்தான் துலங்க குரவையிடீர்!]

குரவைப் பாட்டு.

பத்தாந் திருவிழா :- காலை தீர்த்தம் கொடுத்தல். இரவு இடபவாகனங்களில் சுவாமி அம்பாள் பவனி வருதல் சத்தாவரணம். இரவு கொடி இறக்கம்.

பதினோறாம் திருவிழா :- இரவு கங்காளநாதர் புறப்பாடு.

உற்சவ சாந்தி :- பெருவிழாச்சாந்தி அபிடேகம், அன்னம் பாலிப்பு நடைபெறும்.

குறிப்பு :- வைகாசி வசந்தோற்சவம் :- வைகாசி வசந்தோற்சவத்துக்காக திருமலை ரகுநாத சேதுபதியவர்கள் (1647 - 1672) வசந்தன் கிராமத்தில் விட்டுக் கொடுத்தது. புஞ்சை நிலம் குருக்கம் 40. இந்த உற்சவம் முற்காலம் நடைபெற்று வந்த சான்றுகள் மட்டும் உள்ளன.

16. நிர்வாகம்.

திருச்சுழியல் பாண்டியர், சோழர், முகமதியர், விசயநகரத்தார், நாயக்கமன்னர் முதலியவர்களின் ஆட்சிக் குட்பட்டிருக்கின்றது. எனினும் கோயிற் பூசைகள், விழாக்கள் முதலியன இடையறாது நடந்து வந்திருக்கின்றன என்பதும், வேறு எவ்வித இடையூறுகளும் ஏற்படவில்லை என்பதும் அறிந்து இன்புறற்பாலது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதியில் பராக்கிரம பாண்டியன் கிராமங்களை நிபந்தமாக விட்டுக் கொடுத்திருப்பதால் பாண்டியர் காலத்திலேயே இத்தலம் மேன்மையுற்று விளங்கியது என்னலாம். பராக்கிரம பாண்டியன் என்ற பெயரில் பலர் இருந்திருப்பதால் இன்ன காலத்திய பரக்கிரம பாண்டியன் என்று வரையறுத்துக்கூற இயலாதிருக்கிறது.

கி.பி. 1605க்கு முன்பு ஒரு காலத்தில் பிற்காலப் பாண்டியர் ஒருவருக்கும் கன்னட அரசனுக்கும் நிகழ்ந்த போரில் உதவிய, "பாரபிட்டி" சேதுபதி (Parabity Sethupathy) என்பவருக்கு "பாண்டிய சிம்மாசனத்தை ஸ்தாபித்தவர்" (Establisher of the Pandia Throne) என்ற பட்டமும், திருச்சுழியல், பள்ளிமடம், திருப்பூவணம் ஆகிய கிராமங்களை அளித்ததாக நெல்சன் (Nelson) துரையவர்கள் மதுரை மான்யுவலில் எழுதியுள்ளார்.

Extracts from Nelson's Madura Manual 1868 :- "Afterwards when the king of Canara and the other countries invaded by the Pandya's Dominions and caused him great loss, Parabity Sethupathy came to rescue and drove back the enemy. For this service, he was given the title of establisher of the Pandya Throne and was granted the Districts of Thirushuli, Pallimadam and Thiruppuvanam"

திருமலைநாயக்கர் சரித்திரத்தை (கி.பி. 1623 - 1659) 1922ல் எழுதிய மு.கோவிந்தசாமி அய்யரவர்கள் இரண்டாவது மைசூர் யுத்தத்திற்கு உதவிய ரகுநாதசேதுபதி (1647 - 1672) அவர்கட்குத் "திருமலைச் சேதுபதி" என்ற பட்டமும் திருப்பூவணம், திருச்சுழியல், பள்ளிமடம் ஆகிய நாடுகளைக் கொடுத்ததாக எழுதியுள்ளார்.

மு. கோவிந்தசாமி ஐயர் எழுதிய திருமலை நாயக்கர் சரித்திரம் பக்கம் 37ல் " நாயக்கர் தங்களுக்கு மாத்திரமே சுதந்திரமாயுள்ள சிங்முகச் சிவிகையையும் கொடுத்து, அவருக்குத் திருப்பூவணம், திருச்சுழியல், பள்ளிமடம் என்ற நாடு களையும் அளித்ததோடு வருடந்தோறும் செலுத்த வேண்டிய தோப்பாப்ப பணத்தையும் வஜா செய்தார்" என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயக்க மன்னர்கள் சரித்திரத்தை விரிவாக ஆங்கிலத்தில் (1929ல்) எழுதியுள்ள R. சத்தியநாத அய்யரவர்கள் திருமலை நாயக்கர் சரித்திரத்தில் இது பற்றி ஒன்றும் எழுதவில்லை.

கோவில் கணக்குச் சுவடிகளிலிந்து திருமலை ரகுநாத சேதுபதி (கி.பி. 1647 - 1672) அவர்கள் காலத்துக்கு முன்பு சடைக்கோத் தேவர் என்ற உடையான் சேதுபதி (கி.பி. 1605 - 1621) அவர்களின் ஆட்சி இருந்திருப்பதாகத் தெரிய வருவதால், நெல்சன் துரையவர்கள் எழுதியபடி கி.பி.1605க்கு முன்புள்ள பாரபிட்டி சேதுபதி காலம் முதல் இக்கோயில் சேதுபதிகளின் நிர்வாகத்தில் உள்ளது என்று கொள்வதே பொருத்தமுடையது.

சேதுபதிகளின் பெருமையைக் கூறுவதெனின் அது ஒரு தனி நூலாக எழுத வேண்டியதாகும். இஞ்ஞான்றும் சேதுவேந்தர்களே அறங்காவலராக இருந்து இக்கோயிலைச் சிறப்புற ஆட்சிசெய்து வருகின்றனர்.

17. சொத்துக்கள்.

திருச்சுழியல் கோயிலுக்கு முன்பு புராதனமாய் பராக்கிரம பாண்டிய மகாராஜா அவர்கள் பூசை நைவேத்தியம், உற்சவங்களுக்காகச் சுத்த சர்வமானியமாக விட்டுக் கொடுத்த கிராமங்கள் :-

1. ஆலடிபட்டி
2. உடையனாம்பட்டி
3. சீராமனேந்தல்
4. பிள்ளையார் தொட்டியங்குளம்
5. பாறைக்குளம்
6. கொக்குளம்
7. சப்பாணிஏந்தல்
8. தேவரடியாள் கரிசல்குளம்
9. வேப்பிலைச்சேரி
10. தமிழ்ப்பாடி
11. ஊரணிப்பட்டி
12. பிள்ளையாரேந்தல்

பாண்டியர்களில் "பராக்கிரம பாண்டியன்" என்று பலபேர் இருந்திருப்பதால் இன்ன காலத்துப் பாண்டியன் என்று கூறுவதற்கில்லை.

திருமலை ரகுநாத சேதுபதி அவர்கள் (1647 - 72) திருப்பணிக்கும் பூசைக்கும் சுத்த சர்வ மானியமாக விட்டுக் கொடுத்தது :-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சுழியல் உள்கடை உள்பட கிராமம் 1 (பூசை)

(திருமேனிநாதநல்லூர்)

நாடாகுளம்	1	திருப்பணிக்கு
சூச்சனேரி	1	
உடைச்சி ஏந்தல்	1	
வடபாலை	1	
கருப்புக்கட்டி ஏந்தல்	1	நிர்வாகத்துக்கு
புது ஏந்தல்	1	

ஆக கிராமங்கள் 7

பள்ளிமடம் காளைநாத சுவாமி கோயிலுக்கு பூசை நைவேத்தியத்துக்கு விட்டுக் கொடுத்தது ;-

முத்தராமலிங்க சேதுபதி காலம் (1763 - 72, 1782 - 95) பிரதானி - பிச்சபிள்ளை. அர்த்த சாமக்கட்டளை பூசைக்கு விட்டுக்கொடுத்தது.

கல்யாணசுந்தரபுரம்	1
அஞ்சானைக்குத்தி	1
கல்லத்திக்குளம்	1

ஆக கிராமங்கள் 3

ஷியார் குமாரர் முத்துக்கருப்ப பிள்ளை கார்த்திகை கட்டளை சேர்மவாரக் கட்டளை பூசைக்கு

தொண்டமாங்குளம் 1 குருஞ்சாக்குளம் 1

ஆக கிராமங்கள் 2.

எர. வெங்கடபதி நாயக்கர் துவாதசிக் கட்டளைக்காக விட்டுக் கொடுத்தது.

கோணப்பனேந்தல் 1.

கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் உபயம்.

பழநிக்குமாரசுவாமி கட்டளை, கோயில் பூசை நைவேத்தியத்திற்கு விட்டுக்கொடுத்தது பெருமானேந்தல் 1.

ஆக கிராமங்கள் 2.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பள்ளிமடம் காளைநாத சுவாமி கோயிலுக்கு பூசை நைவேத்தியத்துக்கு விட்டுக் கொடுத்தது :-

காளையார்கரிசல்குளம்	1	பறையன்குளம்	1
பிள்ளையார்நத்தம்	1	முத்தானேந்தல்	1
நத்தக்குளம்	1		

ஆக கிராமங்கள் 5.

திருமலை ரகுநாத சேதுபதி அவர்கள் கொடுத்த கிராமங்கள் 12 தவிர வசந்த உற்சவத்திற்காக வசந்தன் கிராமத்தில் புஞ்சை 40.குருக்கம்

பவானி சங்கர் சேதுபதி காலம் (1726 - 29) மதவுடைச்சி சேர்வைகாரர் உச்சிக்கால கட்டளைக்கு விட்டுக் கொடுத்தது.

பனையூர்	1	காரேந்தல்	1
ஆண்டிபட்டி	1	கீழகண்டமங்கலம்	1

ஆக கிராமங்கள் 4.

செல்லத்தேவர் (முத்துவிஜயரகுநாத சேதுபதி) காலம் (1749 - 62) முத்துக் கருப்பணன் சேர்வைகாரர் விளாபூசைக் கட்டளை பூசைக்கு விட்டுக் கொடுத்தது.

புலிக்குரிச்சி (உள் கடை உள்பட)	1
கல்லு மடம்	1
ஷ உள்கடை கத்தாளம்பட்டி	1
(சிவகங்கைச் சீமை) குமுளங்குளம்	1
துணைமாலை புரம்	1

ஆக கிராமங்கள் 5.

கட்டயத்தேவர் (1730 -35) சுக்கிரவாரக் கட்டளை பூசைக்கு வபிரவன் சேர்வையவர்கள் விட்டுக் கொடுத்தது குண்டுகுளம் கிராமம் 1

இக்கிராமங்கள் 41 ஐயும் தற்காலம் தமிழக அரசினர் எடுத்துக் கொண்டு, இவற்றின் வருவாயின் மீது கொடுக்கப்படும் "தஸ்தீக் அலவன்ஸ்" வருமானத்தைக் கொண்டு நித்யப் படித்தரம், பூசை, விழா, திருப்பணிகள் முத்லியன நடைபெற்று வருகின்றன.

தவிர திருவாபரணம், பட்டு பரிவட்டம், பாத்திரங்கள் முதலியன போதுமான அளவு உள்ளன தற்போதுள்ள வருமானம் சிலவு விபரங்கள் யானறிந்து எழுதுவதற்கியல வில்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

List of Stone Inscriptions copied at Tiruchuli

List of stone Inscriptions copied by the Assistant Archaeological Superintendent for Epigraphy in 1914 in the Thirumeninathaswami Temple at Thiruchuli, Aruppukkottai Taluk, Ramnad District.

No.	Place of Inscription	Dynasty	King	Date	Language and Alphabet	Remarks.
417	On the north wall of the Prakara of the Sahayavalli shrine in the Tirumeninatha swami Temple at TIRUCHULI Aruppukkottai Taluk, Remnad District.	Chola	Rajakesari - Varman (Raja Raja I)	10th year	Tamil Vatteluttu	Fragment Gift of a a Lamp
418	On the same wall	do	Rajakesari Varman, who destroyed the ships at Kandalur.	12th year	do	Fraqment
419	On the door-post of the Pralaya Vitankar shrine in the same Temple.	Pandya		Saka 1152	Tamil	Unfinished, Seems to refer to the defeat of a certain jananatha,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

List of stone inscriptions copied during the year 1935 - 36., by the Superintendent for Epigraphy, in the Pralaya - Vitankar Temple at Thiruchuli, Aruppukkottai Taluk, Ramnad District.

No.	Place of Inscription	Dynasty	King	Date	Language and Alphabet	Remarks.
192	TIRUCHULI - Slab set up in front of the Pralaya Vitankar Temple	Madura Nayaka	Vijaya Muttu-Chokkanatha Nayaka, son of Rangakrishna Muttu Veerappa Nayaka	Saka 1630 Sarva-dhari kar ttigai su. 7, Monday Tiruvonam.	Tamil	Registers gift of lands in Nadakulam near Achaneri to the temple of Tirumeninathaswami by Erai Venkatapati Nayaka, son of Ramanappa Nayaka, for the merit of the King.

N.B :- இது தவிர 15-9-1959 ல் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப்பதிகமும் திருக்கோவையார் பாசுரமும் கல்வெட்டுப் பதிக்கப்பட்டிருக்கிறது.

(With the Kind Permission by Epigraphist of India No. 119 - 2521 / 2514 of 25-8-1954.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொல்லியல் துறை தகவல்

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
1.	179 / 2005	கி.பி. 10ஆம் நூற்றாண்டு	மன்னன் கோமாறஞ்சடையன்	திருமேனிநாதசுவாமி கோயில், அர்த்தமண்டபம் நிலைவாயில்	திருச்சுழியல் அரிகேசரி ஈஸ்வரத்தாழ்வார் கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்காக பழங்காசுகள் கொடையாக அளிக்கப்பட்டத்தைத் தெரிவிக்கிறது.
2.	180/2005	கி.பி. 11ஆம் நூற்றாண்டு	முற்காலப்பாண்டியர்	திருமேனிநாதசுவாமி கோயில், அர்த்தமண்டபச் சுவர்	முழுமையற்ற இக்கல்வெட்டுகள் பருத்திக்குடி நாட்டுத் திருச்சுழியல் மூலத்தானமுடையார் கோவிலுக்குத் திருவிளக்குகள் எரிப்பதற்காக கொடை அளித்ததைக் தெரிவிக்கிறது.
3.	181/2005	கி.பி. 11ஆம் நூற்றாண்டு	சோழர்	திருமேனிநாதசுவாமி கோயில், அர்த்தமண்டபச் சுவர்	பருத்திக்குடி நாட்டுத் திருச்சுழியல் மூலத்தானமுடையார் கோவிலுக்குத் திருவிளக்குகள் எரிப்பதற்காகக் கூற்றஞ்சாற்றி என்பவர்ஆடுகள் கொடையாக அளித்ததைக் கூறுகிறது.
4.	182/2005	கி.பி. 11ஆம் நூற்றாண்டு	சோழர்	திருமேனிநாதசுவாமி கோயில், அர்த்தமண்டபச் சுவர்	பருத்திக்குடி நாட்டுத் திருச்சுழியல் கோயிலில் திருவிளக்குகள் எரிப்பதற்காக கண்டாங்கிழவன் என்பவர் ஆடுகள் அளித்ததைக் இக்கல்வெட்டு கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
5.	183/2005	கி.பி. 11ஆம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 7,8,9	திருமேனிநாத சுவாமி கோயில்,மகாமண்டபச் சுவர்	சோழர்காலத்தினைச் சார்ந்த துண்டுக் கல்வெட்டுகள் இவையாகும்.இதில்முதலாம் இராசராசனின் காந்தளூர் வெற்றி குறிப்பிடப்படுகிறது.
6.	184/ 2005	கி.பி. 13ஆம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 10,11,12	திருமேனிநாதசுவாமி கோயில், மகாமண்டபச் சுவர்	கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் திருவிடைவிளாகம் பற்றித் தெரிவிக்கிறது.
7.	185/2005	கி.பி. 18ம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 13,14,15,16	திருமேனிநாதசுவாமி கோயில், சுவாமி சன்னதி திருச்சுற்றுச் நுலைவாயில்	சிதம்பரமுகாக்கய்யன் சிவநாராயணன் ஆகியோர் திருப்பாணிகள் குறித்து தெரிவிக்கிறது. மேலும் தச்சுமூழும் பற்றியும் தெரிவிக்கிறது.
8.	186/2005	கி.பி. 9-10ம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 17	திருமேனிநாதசுவாமி கோயில், அம்மன் சன்னதி வடக்கு திருச்சுற்றுச் சுவர்	திருநந்தாவிளக்கு எரிப்பதற்காக நாராயநாழி என்ற அளவையால் உழக்குநெல் தானமாக அளிக்கப்பட்டதைக் தெரிவிக்கிறது.
9.	187/2005	கி.பி. 9-10ம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 18	திருமேனிநாதசுவாமி கோயில், அம்மன் சன்னதி வடக்கு திருச்சுற்றுச் சுவர்	சாத்தம்புகழ், ராச தமிழப்பேரையர் ஆகியோர் பற்றித் தெரிவிக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
10.	188/2005	கி.பி. 9-10ம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 19	திருமேனிநாதசுவாமி கோயில், அம்மன் சன்னதி வடக்கு திருச்சுற்றுச் சுவர்	தச்சர்குடியைச் சார்ந்த சாத்தன் சாத்தன், தொன்மை பெருந்தட்டான் ஆகியோர் பருத்திக்குடி திருச்சுழியல் பரமசுவாமிக்குத் திருவிளக்கு எரிப்பதற்காக விளக்கு கொடை அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.
11.	189/ 2005	கி.பி. 11ஆம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 20,21	திருமேனிநாத சுவாமி கோயில், அம்மன் சன்னதி வடக்குச் சுவர், தெற்கு வெளிச்சுற்றுச் சுவர்	திருச்சுழியல் பரமசுவாமிக்கு உச்சியம்பொழுது திருப்பிக்குத் திருவமுது செய்வதற்காக நெட்றகொடை அளித்ததைக் கூறுகின்றன.
12.	190/2005	கி.பி.	ஊர்க்கல்வெட்டு எண் : 22 மதுரை நாயக்கர்	திருமேனிநாதசுவாமி கோயில் பிரளையவிடங்கர் சன்னதி முன்புள்ள தனிக்கல்	இக்கல்வெட்டு எற வெங்கடபதி என்பவர் விசையமுத்து சொக்கனாத நாயக்கர் அவர்களுக்குப் புண்ணியமாகத் திருச்சுழியலைத் திருமேனிநாத சுவாமி கோவிலுக்கு கூச்சநேரி, வடபாலை, நாடாகுளம், பாதிவூர் முதலிய ஊர்களைத் தானமாக அளித்ததைத் தெரிவிக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
13.	191/2005	கி.பி. 13ம் நூற்றாண்டு	ஊர்க்கல்வெட்டு எண் : 1-6	அம்மன் கோவில் கிழக்குச் சுவர், மேற்குச் சுவர்	கோவில் வழிபாட்டிற்கும், திருநந்த வனத்திற்கும் இறையிலியாக நிலங்கள் அளிக்கப்பட்டு அவற்றிக்குறிய வரிகள் தொடர்பான ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனை மதுரையிலுள்ள அரண்மனையிலிருந்து வழங்கினான் என்று இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இதில் வானவன்மாதேவி மங்கலத்துச் சபையார் குறிப்பிடப்படுகின்றனர்.
14.	192/ 2005	கி.பி. 8ஆம் நூற்றாண்டு	மாறஞ்சடையன்	அம்மன் கோயில் கிழக்குச் சுவர், மேற்குச் சுவர்	வெண்பு நாட்டு குறண்டியிலுள்ள திருக்காட்டாம்பள்ளி என்ற சமணப் பள்ளிக்கு (கோயிலுக்கு) (கரு) நிலக்குடி நாட்டுக் குண்ணூர்ச் சா(த்த)ங் குணத்தான் என்பவன் திங்கள்தோறும் பதினாழி நெய் அளப்பதற்கு (விளக் கெரிப்பதற்கு) நூறு ஆடுகள் அளித்ததைக் கூறுகிறது. இக்கல்வெட்டுப் பொறித்த கற்கள் குறண்டியில் இருந்து அழிந்துபோன சமணப்பள்ளியின் கட்டடத்திலிருந்து அடுத்து வரப்பட்டதாகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப் படும் வெண்பு நாட்டுக் குறண்டி என்ற ஊர் விருதுநகர் மாவட்டத்தில் காரியாப்பட்டிக்கு அருகிலுள்ள ஆவியூர் பகுதியில் இன்றும் அதே பெயரில் உள்ளது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
15.	193/ 2005	கி.பி. 8ஆம் நூற்றாண்டு	முற்காலப்பாண்டியர்	காளநாத சுவாமி கோயில் வடக்குப்புற அதிட்டாணம்	(குறண்டித் திருப்பாட்டாம்பள்ளிக்கு) அளவ்வுகோன் காளி பெற்றமும் அவனது மகள் அப்பி சிங்கமும் அளித்த கொடையைக் கூறுகிறது.
16.	194/ 2005	கி.பி.8-9ஆம் நூற்றாண்டு	மாறஞ்சடையன்	காளநாத சுவாமி வடபுறச் சுவர்	வெண்புறாட்டுக் குறண்டியிலுள்ள சமணப்பள்ளிக்கு குறண்டியைச் சார்ந்த சாத்தங்காரி திருநந்தாவிளக்கு எரிப்பதற்காக ஐம்பது ஆடுகள் அளித்ததை முதல் கல்வெட்டு தெரிவிக்கிறது. இதற்குக் காவலாக ஊராரும் கணத்தாரும் இருந்தனர் மற்றொரு கல்வெட்டு திருக்காட்டாம் பள்ளிக்குத் திருநந்தாவிளக்கு எரிப்பதற்காகப் பூவணவன் என்பவன் எழுபத்தைந்து ஆடுகள் அளித்துள்ளதைக் கூறுகிறது. இக்கல்வெட்டில் குறண்டில் இருந்த பெண் துறவியின் (குறண்டிக் கன்னிமார்) குறிப்பிடப்படுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
17.	195/ 2005	கி.பி.9ஆம் நூற்றாண்டு	மாறஞ்சடையன்	காளநாத சுவாமி கோவில் முன் மண்டபத்திலுள்ள வாசல்படிக்கல்	வெண்புநாட்டுக் குறண்டியில் இருந்த திருக்காட்டாம்பள்ளி என்றழைக்கப்பட்ட சமணப்பள்ளியில் திருவிளக்கு எரிப்பதற்காகத் திங்கள் தோறும் ஐந்து நாழி நெல் அளப்பதற்கு ஐம்பது ஆடுகள் அறித்ததைத் தெரிவிக்கிறது. ஒலத்தூரைச் சார்ந்த பாம்பாரூரைச் சேர்ந்தவன் இத்தானத்தை அளித்துள்ளான்.
18.	196/ 2005	கி.பி.10ஆம் நூற்றாண்டு	சடையன்மாறன்	காளநாத சுவாமி கோவில் வடக்குச் சுவர்	பருந்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுரியல் சுந்தரபாண்டிய ஈசுவரத்து இறைவனுக்கு அளற்று நாட்டுக் கலிசல் மங்கலத்து தச்சன்..ன் உலகன் என்பவன் விளக்கு எரிப்பதற்காக 25 ஆடுகள் அளித்ததைக் கூறுகிறது. இக்கல்வெட்டில் வெண்புநாட்டுப் பிரம தேயம் வானவன்மாதேவி ஊர்ச்சபையார் குறிப்பிடப்படுகின்றனர். கோயிலுக்கு அளிக்கப்பட்ட ஆடுகளைப் புணையாகப் பெற்றவர்கள் பெயர்களும் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
19.	197/ 2005	கி.பி.953ஆம் நூற்றாண்டு	சோழன்தலை கொண்ட வீரபாண்டியன்	காளநாத சுவாமி கோயில் தென்புற அதிட்டாணம்	பரித்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுழியல் பள்ளிபடை சுந்தரபாண்டிய ஈஸ்வரத்துப் படாரர்க்குப் பொழியூர் நாட்டுப் பொழியூர்ச் சோளாந்தகப் பல்லவரையனாயின மானாதிச்சன் என்பவன் திருநந்தாவிளக்கு எரிப்பதற்காக எழுப்பத்தைஞ்சு ஆடுகள் தானமாக அளித்தான் சோளாந்தக நாராயம் என்ற அளவையினால் இதற்காக உழக்காழக்கு நெல் அளிக்கப்பட்டது. இத்தானத்தினைப் பெற்று அதற்குப் புணையாக இருந்தவர்கள் பெயர்கள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. இதற்குக் காவலாகத் திருச்சுழியல் அய்யன்மார் இருந்தனர்
20.	198/ 2005	கி.பி.954ஆம் நூற்றாண்டு	சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்	காளநாத சுவாமி கோயில் தென்புறச் அதிட்டாணம்	பருத்திக்குடி நாட்டுத் தோனம் திருச்சுதியல் பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈஸ்வரத்துத் தேவர்க்குத் திருநந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காக ஐம்பது ஆடுகளைக் கிழவன் அருளாழி என்பவன் தன் மகன் கண்டன் தேவன் என்பவனைச் சார்த்தித் தானமாகத் தந்ததை இக்கல்வெட்டு கூறுகிறது இதில் இவ்வாடுகளைப் பெற்றுக் கொண்டு விளக்கு எரிக்க நெல் அளப்பதற்கு ஒப்புக் கொண்ட வெட்டிக்குடி . இடையர்களின் பெயர்களும் குறிப்பிடப் படுகின்றன. இக்கல்வெட்டு அருகில் வேறு சில துண்டு கல்வெட்டுகளும்உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
21.	199/ 2005	கி.பி.955ஆம் நூற்றாண்டு	சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்	காளநாத சுவாமி கோவில் தென்புற அதிட்டானம்	பருத்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுதியல் பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈஸ்வரத்துத் தேவர்க்குத் திருநந்தா விளக்கு எரிப்பதற்காக கொடுக்கப்பட்ட நூறுக்கு மேற்பட்ட ஆடுகளைக் பெற்ற இடையர்களின் பெயர்கள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு இடையரும் எவ்வளவு ஆடுகள் பெற்றனர் என்ற செய்தியும் இதில் கூறப்படுகிறது.
22.	200/ 2005	கி.பி.955ஆம் நூற்றாண்டு	சோழை தலைகொண்ட வீரபாண்டியன்	காளநாத சுவாமி கோவில் கருவறை மேற்குப்புற அதிட்டானம்.	பருத்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுழியல் பள்ளிப்படைசுந்தரபாண்டிய ஈஸ்வரம் என்றழைக்கப்பட்ட சிவன் கோயிலில் பணிபுரிந்த தேவரடியாரின் வழியினர் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். கருதாச்சிலையின் மகள் காவதி கணையம் பெற்றாள் .இவளது மகள் நந்தி சடையம்படாரி ஆவாள். இருவம் திருச்சுழியல் நிதிபெற்றாளின் மகள் காவிதிதாங்கியும் நக்கன் சடையும் குறுங்காவிலையும் ஆச்சன் குலுங்காவிலையும் நக்கன் குலுங்காவிலையும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ. எண்	தொடர் எண்	காலம்	யாரால் வழங்கப்பட்டது	கல்வெட்டு பதிவு காணும் இடம்	குறிப்பு
23.	201/ 2005	கி.பி.957ஆம் நூற்றாண்டு	சோழன்தலை கொண்ட வீரபாண்டியன்	காளநாத சுவாமி கோயில் கருவறை மேற்குச் சுவர்	பருத்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுழியல் பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈஸ்வரம் என்ற கோயிலைச் சார்ந்து மகாவிரதிகள் என்ற சைவமடம் ஒன்று இருந்தது. இம்மடத்தில் விளக்கு எரிப்பதற்காக இருபது ஆடுகள் தானமாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. இவ்விளக்கிற்காகச் சோளாந்தக நாழி என்றழைக்கப்பட்ட நாழியால் முந்நாழி நெல் அளக்கப்பட்டதையும் இவ் விளக்கிற்காக அளிக்கப்பட்ட ஆடுகளைப் பெற்றவர்களும் இத்தானத்திற்குப் புணையாக இருந்தவர்கள் பெயர்களும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன.
24.	202/ 2005	கி.பி.959ஆம் நூற்றாண்டு	சோழை தலைகொண்ட வீரபாண்டியன்	காளநாத சுவாமி கோவில் வடக்குப்புற அதிட்டானம்.	பருத்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுழியல் பள்ளிப்படைசுந்தரபாண்டிய ஈஸ்வரம் இறைவன் கோயிலில் திருநந்தாவிளக்கு இரண்டு எரிப்பதற்காக நூறு ஆடுகள் தானமாகத் தரப்பட்டன. இதனைத் தானமாகத் தந்த பொழியூர் நாட்டு கூடுவூர் மூவேந்த வேளானாயின அரங்கம் பூதியும், தானமாகத் தந்த ஆடுகளைப் பெற்றுக்கொண்டு கோயிலுக்கு நெல்லளக்க ஒப்புக்கொண்ட இடையர்கள் பெயர்களும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. திருப்பணி விவரங்கள்.

நிர்	கோயில் மண்டபம் முதலியன	யாரால் கட்டப்பட்து	தெரிந்த வரை கால விவரம்	ஷரு
1	திருமேனிநாத சுவாமி கர்ப்பகிருகம் அர்த்த மண்டபம் மகா மண்டபம்	பூர்வம் பாண்டியர்களில் பராக்கிரம பாண்டியன்		
2	உட்பிரகாரம் (நாயக மண்டப பிரகாரம் சுற்றுமதில்)	திருமலை ரகுநாத சேதுபதி அவர்கள்	கி. பி. 1647–1672	
	பின்னர் உட்பிரகாரம் சுற்றுத் திருமதில் இவைகளை அழித்து தற்போதுள்ளபடி செய்ததும் தவிர மண்டபங்கட் குட்பட்ட தற்போதுள்ள தளவரிசை முழுவதும், தெற்கு ஆடிவீதி தளவரிசை, மேல் தட்டோடு வகையரு, கௌவைக் கடல் சுற்றியுள்ள காம்பவுண்டு	ஷை தேவஸ்தானம் கிராமம் லைஸியாக இருந்த தி.அ.சு.அண்ணாமலை செட்டியாரவர்கள்	கி. பி. 1918 பிங்கள ஷு தைமீ 10உ	ஸ்ரீ பாஸ்கர சேதுபதி மகாராஜா ரூ.40000 கொடுத்தார்கள் தேவஸ்தானம் குத்தகை ஆதாயத்திலும் இதர செட்டியார்கள் உபயத்திலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்	கோயில் மண்டபம் முதலியன	யாரால் கட்டப்பட்டது	தெரிந்த வரை கால விவரம்	ஷரு
3	ஏழு நிலைக்கோபுரம்	முத்துப்பேட்டை முத்து நாயக்கர்	ஏறத்தாழ கி.பி.1750 கி.பி.1749 – 1762	
4	கோயில் கம்பத்தடி மண்டபம் குடைவரை வாசல் வரை	செல்லத் தேவர்(சேதுபதி) காலத்தில், பிரதானி வெள்ளையன் சேர்வை மைத்துனர் முத்துக்கருப்பணன் சேர்வை	கி. பி. 1749–1762	தென்புரம் உள்ள தூணில் முத்துக்கருப்பணன் சேர்வை உருவம் உள்ளது செலவு ரூ.22000
5	ஷை மண்டபம் முதல் பழநிக்குமாரர் கோயில் வரையுள்ள மண்டபம்	லோகமாதா என வழங்கிய ராணி மங்களேஸ்வரி நாச்சியார் அவர்கள்	கி. பி. 1803–1807	
6	ஷை மண்டபம் மடப்பள்ளி வரை	சின்னச்சாமி ராஜா	கி. பி. 1749–1762	
7	முன் ஆஸ்தான மண்டபம்	பொன்னுபாண்டி நாடார் சிவ சங்கர நாடார் 56 தேசத்திலுள்ள நாடார்கள் பலர் உபயம்	சுமார் கி. பி. 1850	
8	துணைமாலையம்மன் கர்ப்பகிரகம் அர்த்த மண்டபம் ஷை கிலமான பின் ஷை கிலமான பின் தற்போ	முன் பாண்டியர்களால் கட்டப்பட்டது ஏர்.வெங்கடபதி நாயக்கர் வகை	நாயக்க மன்னர்கள் காலம் – சுமார் 1660க்குள்	

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்	கோயில் மண்டபம் முதலியன	யாரால் கட்டப்பட்டது	தெரிந்த வரை கால விவரம்	ஷரூ
	அர்த்த மண்டபம் பள்ளியறை முன் மண்டபம் ஆறுகால் பீடம் வரை	காருபாரு மயனம்பாடி ரெங்கப்பய்யர் அவர்கள்		
9	அம்மன் கோயில் கம்பத்தடி மண்டபம் வடபகுதி	திருச்சுழியல் ஆலயம் நாலாங்கொத்து உருத்திர கணிகையர்களில் திருவு கட்டியது	கி.பி. 1800 – 1820	வடபகுதி தூணில் இவர் சிலையுள்ளது
	ஷை மண்டபம் தென்பகுதி மண்டபம்	அண்ஞசாமி சேதுபதி காலத்தில்பிரதானியர்கள் பிள்ளையால் கட்டப்பட்டது	கி.பி. 1807 – 1820	தென்பகுதி தூணில் அண்ஞசாமி சேதுபதி சிலை இருக்கிறது.
10	அம்மன் கோயில் கம்பத்தடி மண்டபத் துக்கடுத்த திருவாச்சி மண்டபம்	முத்துராமலிங்க சேதுபதி	கி.பி. 1763 – 1772	இவர் இரண்டு ரிஷபங் களும், தந்தபல்லக்கும் செய்துதந்தார்
11	பிரளய விடங்கர் கோயில்	வனமாயிரம் குதிரை கட்டியதும் பிச்சி நாயக்கர்	கி.பி. 1563 – 1573	
	ஷை கோயில் முழுவதும் ஜீரணமாகி விட்டதிலை 1938ம் வ ஜீன் மீ 2உ பாலாலய ஸ்தாபனம் செய்து தற்போதுள்ளபடி புதுப்பிக்கப் பட்டது.	திருப்பணி செய்தவர் தேகோட்டை மாத்தூர் கோயில் மணலூர் பிரிவு வீர.ராம.அழ. சுப்பிர மணியஞ் செட்டியார்	திருப்பணி செலவு ரூ. 40000 கும்பாபிஷேக செலவு ரூ. 20000 ஆக ரூ. 60000	1957 வ பிப்ரவரி மீ 4உ துன்முகி வ தை மீ 22உ எல்லா மூர்த்திகட்கும் மருந்து சாத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்	கோயில் மண்டபம் முதலியன	யாரால் கட்டப்பட்டது	தெரிந்த வரை கால விவரம்	ஷரு
	மேலே ஆடி வீதி முதல் வடக்கு மூலைவரையும், வடக்கு ஆடிவீதி வடக்கு வாசல் வரையும் தள வரிசை	ஷியார் புதல்வர் சுப. பூமிநாதன் செட்டியார்		கும்பாபிஷேகம் நடந்தது.
12	அண்டம் பிரண்ட விநாயகர் கோயில் (மேல ஆடி வீதி மூலையில் வடமேற்கு மூலை சுப்பிரமணியர் கோயில்)	வனமாயிரம் குதிரை கட்டியவர் பிச்சி நாயக்கர்	கி.பி. 1563 – 1573	
13	பெரிய திருமதில் கிழமேல் தச்சு முழம் 111. தென்வடல் 106.	முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் ஆட்சியில் பிரதானி முத்திருளப்ப பிள்ளை அவர்கள்	கி.பி. 1763 – 1772 கி.பி. 1772 – 1795	மொத்தம் திருமதில் செலவு ரூ.36814 சில்லரை
14	திருக்கல்யாண மண்டபம்	முத்துவிஜயரகுநாத சேதுபதி	கி.பி. 1763 – 1772	திருக்கல்யாணம் நடந்து வந்தது தற்போது திருப்புகழ் சபை உள்ளது
15	தபசு மண்டபம்	ஆத்தங்கரை வேலாயுத சுவாமிகள்		பாவகரி நதிக்கு வடக்கே கட்டி இருந்தது கிலமாகி விட்டதால் அதைப் பிரித்து வந்து தற்போது சந்நதிக் கெதிரில் பாவகரி நதிக்கு மேற்கே தேவஸ்தானத்தில்

நிர்	கோயில் மண்டபம் முதலியன	யாரால் கட்டப்பட்டது	தெரிந்த வரை கால விவரம்	ஷெரு
				கட்டப்பாட்டுள்ளது. தபசு விழா இந்த மண்டபத்தில் நடந்து வருகிறது.
16	ஆருந்திருநாள் மண்டபம்			மண்டபம் என்ற தலைப்பில் காண்க.
17	அம்மன் வாசலடியில் தாமரை சிற்பம்	லக்ஷ்மண மூப்பன் அய்யன் மூப்பன்	கி.பி 1852	
18	அம்மன் கோயில் தள வரிசை	பலர் உபயம்.		
19	சுவாமி கோயில் ஸ்தூபி		கி.பி. 1810	தங்கமுலாம் செய்து கும்பாபிஷேகம் நடந்தது
20	அம்மன் கோயில் ஸ்தூபி	அண்ணுசாமி சேதுபதி ஆட்சியில் பிச்சபிள்ளை	கி.பி. 1807 – 1820	
21	கௌவைக் கடல் வடக்கு மதில் முதல் சுவாமி சந்நிதி படித்துறை வரை	அவர்கள் ஆதியில் திருநெல்வேலியைச் சேர்ந்த பெத்து நாயக்கர்	கி.பி. 1824	
22	மீதப்பகுதி	முத்துப்பேட்டை முத்து நாயக்கர்		இதில் 4 கால் மண்டபமாக இருந்ததை 16 கால் மைய மண்டபமாக கட்டினர்
23	பழநிக்குமாரு சுவாமி கோயில்		கி.பி. 1807 – 1820	

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிர்	கோயில் மண்டபம் முதலியன	யாரால் கட்டப்பட்து	தெரிந்த வரை கால விவரம்	ஷரு
24	சுழிகை சொக்கம்மை கருப்பக்கிரகம்	பாண்டியர்களால் உண்டானது		
	ஷை முன் மண்டபம் திருமதில்	"		
25	மாரியம்மன் கோவில்	"		
26	சுழிகை அம்பல மண்டபம் ஆஸ்தான மண்டப குடவரை	வனமாயிரம் குதிரை கட்டியதும் பிச்சி நாயக்கர்	கி.பி. 1563-1573	
27	அங்காளம்மன் கோயில்	முத்துவீரப்ப முதலியார் வகையரு பலர் உபயமாகக் கட்டியது அங்கப்ப முதலியார் கல்கிணறு கட்டியது		
28	தேரடி கருப்பண சுவாமி கோயில்	கோயில் ஸ்தானீகம் செண்பககண் பட்டரவர்கள் கட்டி பிரதிஷ்டை செய்தது		
29	பள்ளிமடம் காளைநாத சுவாமி கோயில்	பாண்டியர்		
30	கண்மாய்ப் படித்துறை	சிவபரங்கிரி செட்டி		
31	அம்மன் கோயில் பெரிய திருவாச்சி	தமிழ்ப்பாடி பெரிய வீட்டார்		
32	தெப்பக்குளம் தென்பகுதி தள வரிசை	தேவஸ்தானத்தார்	1967	

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைரத்தேர் மூன்றும் 100 வருஷங்களுக்கு முன் திருநெல்வேலி சுப்பிரமணிய ஆசாரி என்பவரால் செய்யப் பட்டது.

பட்டயத்தில் திருப்பணி செய்தவர்கள் பெயர்கள் உள்ளன. அதில் சிலர் என்ன திருப்பணி செய்தார்கள் என்பது புலப்பட வில்லை. அவர்கள் பெயர்கள் வருமாறு :-

திருவிருந்தபெருமாள் பிள்ளை
சிவசங்கரம் பிள்ளை
வைத்திலிங்க முதலியார்
மதவுடச்சி சேர்வைக்காரன்
மைனம்பாடி ரெங்கப்பய்யர்
சின்னவில்லி
இருளப்பசேர்வைகாரன்
ஆண்டியப்ப பிள்ளை
முத்துகாமாக்ஷியா பிள்ளை
முத்துதேரபாப்புத் தேவர்
பிச்ச பிள்ளை
வேலாயுதம் பிள்ளை
முத்துக்கருப்ப பிள்ளை
அய்யப்பன் செட்டி
தாண்டவன் செட்டி
தில்லை செட்டி
முதலானோர்.

20. தலத்தைப் பற்றிய நூல்கள்

1. திருச்சுழியற் புராணம். ஆசிரியர் ஆராவமுதாசாரியர் 600 செய்யுட்கள் முதற்பதிப்பு 1895 ஞு (ஜய ஞு தை மீ) வெளியிட்டவர் தி. அ. சு. அண்ணாமலை செட்டியார். ஆய்ந்துதவியவர், தாமோதரபுரம் சுப்பிரமணிய பிள்ளை.

2. திருச்சுழியற் புராணம் ஷ அண்ணாமலை செட்டியாரால் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணம் அம்பலவாண நாவலரால் காளையார் காட்சிசருக்கம் (149 பாடல்) பாடிச்சேர்க்கப்பட்டது. மற்றவை புராண ஆசிரியர் வரலாற்றிற் காண்க. (1901 ஐப்பசி)

3. திருச்சுழியல்வெண்பா அந்தாதி உரையுடன் (1912) ஆசிரியர் சென்னை இந்து ஞான போதினி பத்திராபர் திருக்கண்ணபுரம் பண்டிதர் "பாலசரஸ்வதி" P.R. கிருஷ்ணமாச்சாரியார் (கி.பி.1876 - 1922) இதனை அவரே பாடி, ஆசிரியர் இன்னரெனத்தெரிய வில்லை எனப் பதிப்பித்துள்ளார்.

4. திருச்சுழியற் கொம்பிலா வெண்பா அந்தாதி - ஆசிரியர் வித்வான் தாமோதாபுரம் சுப்பிரமணியபிள்ளை 1918 (பிங்கள ஞு தைமீ 10உ கும்பாபிஷேக வெளியீடு) ஆராய்ந்துதவியவர் தேவகோட்டை சொ.வேலுச்சாமிக் கவிராயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. துணைமாலையம்மை பிள்ளைத்தமிழ் (குறைநூல்) ஆசிரியர் தெரிய வில்லை.

6. திருச்சுழியற் குரவைப்பாட்டு (குறைநூல்) ஆசிரியர் தெரியவில்லை.

7. திருச்சுழியற் பள்ளு ஷை

8. திருச்சுழியற்கயிற்றுப்பின்னல். ஆசிரியர் திருச்சுழியற் குமாரகவிராயர்.

(5 to 8 ஆகிய நான்கு நூல்களும் சேர்த்து 1939ல் சென்னை தணிகை மணி திரு. வ.சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் குறிப்புரையுடன் திறம்படப்பதிப்பித்துள்ளார்)

9. துணைமாலையம்வம பிள்ளைத்தமிழ் (5 to 8) இரண்டாம் பதிப்பு 1965.கோவை கவியரசு நடேசக் கவுண்டரவர்களால் பிள்ளைத்தமிழ் (44) குறைப்பாடல்களைப் பாடச் செய்து தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ளனர்.

10. திரிசூலபுர மகாத்மியம் (உரைநடை) திருவண்ணமலை ஸ்ரீ ரமணச்ரமம் வெளியீடு (வடமொழித் திரிசூலபுர மான்மியத் தமிழ் மொழி பெயர்ப்பு)

11. திருச்சுழியற் புராணத் தோத்திரத்திரட்டு, கடைத் தெரு வெள்ளை விநாயகர் கோவிலார் வெளியிட்டுள்ளனர்.

12. திருச்சுழியல் ஆடித்தவசு வழி நடைச்சிந்து அச்சேறியுள்ளது. பிரதிகள் கிடைக்க வில்லை. ஷை 1 & 12 நிர் நூல் பிரதிகள் வைத்திருப்பவர்கள் பிரதி தந்துதவ கேட்டுக்கொள்கிறேன்.

21. இலக்கியம்

திருச்சிற்றம்பலம்
திருச்சுழியல் தேவாரம்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தது.
பண் : நட்டபாடை

ஊனாய் உயிர்புக லாயக லிடமாய் முகில் பொழியும்
வானாவரு மதியாய் விதிவருவானிடம் பொழிலின்
தேனா தரித் திசைவண்டின மிழற்றுந்திருச்சுழியல்
நானா வித நினை வார்தமை நலியார் நமன்தமரே. VIII 82 - 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை :

ஊனாய் - உயிர் தங்குதற்கு இடமாகிய ஊனாகியும் உயிர்புகலாய் - உயிர்க்குப் புகலிடமாயும், உயிராகியும் அவ்வுயிர்க்குப் புகலிடமாயும் எனவும் கொள்ளலாம். அகலிடமாய் - (பஞ்ச பூதங்களில் ஒன்றுகிய) அகன்ற நிலமாயும், முகில் - மேகங்கள் பொழியும் - பொழிகின்ற (உலகுக்குப் பொழிந்து உதவுகின்ற) வானாய் - மழையாகியும், வருமதியாய், வரும் - எழுகின்ற மதியாய் - அறிவாகியும், விதி - விதியாகவும், வருவான் - வருகின்ற பெருமான், இடம் - வீற்றிருக்கும் இடமாகிய, பொழிலின் - பொழில்களிலுள்ள, தேன் - தேனை, ஆதரித்து - விரும்பி, இசை - இசையொலியை, வண்டினம் - வண்டின் கூட்டங்கள், மிழற்றும் - ஒலிக்கின்ற, திருச்சுழியல் - என்னும் தலத்தை, நானாவிதம் - பலபலவிதமாக, நினைவார்தமை - நினைப்பவரை, நமன் - யமனுடைய, தமர் - தூதர்கள், நலியார் - வருத்தமாட்டார்.

பொழிப்புரை :

ஊனாகியும், உயிராகியும், உயிர்க்குப் புகலிடமாயும் நிலமாகவும், நிலத்தை ஆதரிக்கும் மழையாகவும், மதியாகவும் விதியாகவும் உள்ள பெருமானது இடமாகிய திருச்சுழியலை பொழில்களில் உள்ள தேனை உண்ண விரும்பி வண்டின் கூட்டங்கள் இசைமிழற்றும் திருச்சுழியலை எக்காரணத்தால் நினைத்தாலும் அங்ஙனம் நினைப்பவர்களை யமதூதர்கள் வருத்தமாட்டார்கள்.

குறிப்புரை :

"ஊனாகிம், உயிராகி" - திருவாசகம் திருச்சதகம் 15. வான் - மழை. வான்மடி பொழுதில் - பெரும் பாணாற்றுப் படை 107. விதிவருவான் - ஊழாகி வருபவன் "கதியாய் விதியாய் குருவாய் வருவாய்" கந்தரனுபூதி "விதியாய் விளைவாய்"- சம்பந்தர் தேவாரம் I 30 -1. மதியாய் வருதல் - "மதியுமாம் மழபாடியுள் நாதன் நற்பாதமே"- சம்பந்தர் தேவாரம் திருழபாடி III 48 - 2 நினைத்தாலே பலன் தரும் திருச்சுழியல் - என்ருதனாலே திருச்சுழியல் நினைத்தால் முத்தி தரும் திருவண்ணமலையை நிகர்க்கும் என்பது தெளிவுறப் பெறப்படுகின்றது. இதுபற்றியோ திருச்சுழியலில் தோன்றிய ஸ்ரீரமணமுனிவர் வேறு தலத்தை நாடாது திருவண்ண மலையை இருப்பிடமாகக் கொண்டனர் போலும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு தலத்தில் வீற்றிருக்கும் இறைவனையேயன்றி அத்தலத்தைப் போற்றுதலே புண்ணியச் செயலாம். அது பற்றியே - "திருச்சுழியல் இறைவனை" என்னாது "திருச்சுழியல் நினைவார் தமை" என்றார் "ஆருரைப் பத்திமலர் தூவமுத் தியாகுமே" சம்பந்தரும் (91 -1) நானாவிதம் நினைவார் - யாது காரணம் கொண்டு நினைத்தாலும் நமன்றமர் நலியார்.

2. தண்டேர் மழுப்படையான் மழவிடையானெழு கடனஞ்
கண்டேபுர மெரியச்சிலை வளைத்தானி மையவர்க்காத்
திண்டேர் மிசை நின்றானவனுறையுந் திருச்சுழியல்
தொண்டேசெய வல்லாரவர் நல்லார் துயரிலரே. VII 82 -2

பதவுரை :

தண்டு - தண்டாயுதமும், ஏர் - அழகிய, மழுப்படையான் - மழு ஆயுதத்தையும் உடையவன், மழ - இளமை வாய்ந்த, விடையான் - இடபவாகனத்தை உடையவன், எழுகடல் நஞ்சு - கடல் எழு நஞ்சு - கடலில் தோன்றிய நஞ்சை (விஷத்தை) உண்டே - உண்டும், புரம் - திரிபுரங்கள், எரிய - எரியும்படி, சிலை - வில்லை, வளைத்தான் - வளைத்தவனாய், இமையவர்க்கா(க) - தேவர் களுக்காகத், திண் - வலிய, தேர்மிசை-தேர்மீது, நின்றானவன் - நின்றவனுமான (சிவன்) உறையும் - வீற்றிருக்கும், திருச்சுழியல் - திருச்சுழியல் என்னும் தலத்தில், தொண்டே செய - தொண்டுகள் செய்ய, வல்லாரவர் - வல்லவர்கள், நல்லார் - நல்லவர்கள், துயரிலரே - துயர்இல்லாதவராவார்.

பொழிப்புரை :

தண்டு மழு என்னும் படைகளை உடையவன், இளைய எருதை வாகனமாகக் கொண்டவன், கடல் நஞ்சை உண்டவன், இமையவர் பொருட்டுத் தேரேறிப் புரமெரிய வில்லை வளைத்தவன் உறையும் திருச்சுழியலில் தொண்டு செய்யவல்லவர்கள் நல்லவர்கள், துயரில்லாதவர்கள்

குறிப்புரை :

தண்டு - சிவபிரானுக்குத் தண்டும் ஒரு ஆயுதம். "தண்டொடு சூலந் தழைய ஏந்தி" - சம்பந்தர் தேவாரம் திருவலஞ்சுழி III 105 - 6. திரிபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எரித்த ஞான்று "வானோர் எல்லாம் ஒரு தேராய்" (சம்பந்தர் திருவீழி I 11 - 6) சமைந்தாராதலின் "திண்தேர்" என்றூர் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திரு வாக்கின் உண்மை தெரிந்து "தொண்டே செய வல்லார்" என்றூர். இப்பாடலால் திருச்சுழியலில் அரன் திருப்பணி, அடியார்க்குத் திருப்பணி முதலியன செய்தலின் பேறும் சிறப்பும் தெரிகின்றன.

3 கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார் குடைந்தாடுந் திருச்சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவார் அடி தொழுவார்
அவ்வத் திசைக் கரசாகுவர் அலராள் பிரியாளே. VII 82 -3

பதவுரை :

கௌவைக் கடல் - ஒலிக்கும் கடல் போன்ற "கௌவைக்கடல்" என்னும் தீர்த்தம், கதறி – ஒலித்து, கொணர் – கொண்டு வரும், முத்தம் - முத்துக்கள், கரைக்கு - கரையில், ஏற்ற - ஏறிவரும்படி, கொவ்வை - கோவைப்பழம் போலச் சிவந்த, துவர் - பவள நிறத்த, வாயார் - வாயைக் கொண்ட பெண்கள், குடைந்து - திளைத்து : ஆடும் - நீராடும், திருச்சுழியலில் வீற்றிருக்கும், தெய்வத்தினை - தெய்வமாம் சிவபிரானை, வழிபாடு செய்து எழுவார் - வழிபட்டொழுகும் ஒழுக்கத்தவருடைய, அடி - திருவடியைத், தொழுவார் - தொழுபவர்கள், அவ்வத்திசைக்கு - அந்த அந்த திசைக்கு (அவரவர் இருக்கும் இடத்துக்கு) அரசாகுவர் - அரசாட்சி புரியும் பதவியை எய்துவர், அலராள் - இலக்குமி, பிரியாள் - அவர்களை விட்டுப் பிரிய மாட்டாள்.

பொழிப்புரை :

கௌவைக்கடல் என்னும் தீர்த்தத்தில் (சங்குகள்) ஈனும் முத்தங்கள் கரைக்கு ஏறும்படிப் பெண்கள் திளைத்து விளையாடும் திருச்சுழியற் பெருமானை நியமத்துடன் வழி படுவோரது அடியைத் தொழுபவா அவரவா வாழும் திசையில் அரசபதவியை எய்துவர்; அவாகளை விட்டு இலக்குமி பிரியாள்.

குறிப்புரை :

கவ்வைக்கடல் - திருச்சுழியலில் கோயிலுக்கு எதிரில் உள்ள தீர்த்தம்." ஒலிப்புணரி" என்றூர் சுழியற் புராணத்தில். கொவ்வைத்துவர்வாயார் - "கொவ்வைச் செவ்வாய்" "செந்துவர்வாய்" – திருவாசகம் 6-2, 9 –13.

4 மலையான் மகள் மடமாதிட மாகத்தவண் மற்றுக்
கொலையானையின் உரிபோர்த்த எம்பெருமான் திருச்சுழியல்
அலையார் சடை யுடையான் அடி தொழுவார் பழு துள்ளம்
நிலையார் திகழ் புகழால்நெடு வானத்துயர்வாரே. VII 8 -4

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை :

மலையான் மகள் - இமயராசன் மகளாகிய, மடமாது - மடப்பம் பொருந்திய மாதாகிய பார்வதி, இடம் ஆகத்தவள் - உடம்பில் இடது பாகங் கொண்டவளாக, மற்று - பின்னும், கொலை - கொலைக்குணம் உடைய, யானையின் - யானையினுடைய, உரிபோர்த்த - உரித்த தோலைப் போர்த்த, எம்பெருமான் - எமது பெருமான், திருச்சுழியல் - திருச்சுழியலில் வீற்றிருக்கும், அலையார் சடையுடையான் - அலைவீசும் கங்கையைச் சடையில் உடையவன், (ஆகிய சிவனது) அடி - திருவடியைத், தொழுவார் - தொழுபவர்,உள்ளம் உள்ளத்தில், பழுது குற்றங்கள், நிலையார் - நிலையாதவராவார்; திகழ் - விளங்கும், புகழால் - புகழால், நெடுவானத்து - நீண்ட வானுலகில், உயர்வார் - மேம்பட்டு விளங்குவார்

பொழிப்புரை :

மலை மகளை இடப்பாகத்தே கொண்டு, யானையின் தோலைப் போர்த்து, அலை வீசும் கங்கையைச் சடையில் தரித்த திருச்சுழியற் பெருமானது திருவடியைத் தொழு பவருடைய உள்ளத்தில் குற்றம் நிலைபெருது ; அதாவது அவர்கள் உள்ளம் எப்போது பரிசுத்தமாய் இருக்கும். (தூய்மையாய் இருக்கும்); அவர்கள் புகழுடன் வானுலகில் மேம் பட்டு விளங்குவர்

குறிப்புரை :

பழுது - குற்றம் "பழுது செய்வேனை விடேல்" - திருவாசகம் 6-44 சிவபெருமான் தம்மை மணம் புரிய வேண்டிப் பார்வதி தேவியார் பூசித்த தலம் திருச்சுழியலாதலின், மலைமகள் இடப்பாகங் கொண்ட வரலாற்றைக் கூறினர். "மலைமகளை விரத யோக நெறி நின்று மணந்தார் சுழியல் வியனகரும்" - திருவிளை 32

5. உற்றுன் நமக்குயரும் மதிச் சடையான் புலன் ஐந்தும்
செற்ருர்திரு மேனிப்பெருமான் ஊர் திருச்சுழியல்
பெற்ருன் இனி துறையத்திறம் பாமைத்திரு நாமம்
கற்ருரவர் கதியுட் செல்வர் ஏத்தும்மது கடனே VII 85 -5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை :

நமக்கு உற்ருன் - நமக்கு உறுதுணையாக உள்ளவனும் உயரும் - வளரும் பெருமை வாய்ந்த, மதிச்சடையான் - பிறைசூடிய சடைப் பெருமான் புலன்ஐந்தும் - ஐம்புலன்களையும், செற்ருர் திருமேனிப் பெருமான் - வென்றுமேம்படும் திருமேனிநாதன், ஊர் இனிது உறைய - இனிமையுடன் உறைவதற்கு ஊராக, திருச்சுழியல் பெற்ருன் - திருச்சுழியல் என்னும் தலத்தைப் பெற்றவனது, திருநாமம் - திருநாமத்தைத், திறம்பாமை - தவறாத வண்ணம், கற்றாரவர் - கற்றவர்கள், கதியுட் செல்வர் - நற்கதி புகுவர்; (ஆதலால்) ஏத்து(ம்) மது - அவர் நாமத்தை ஏத்துவது, கடனே - நமது கடமையாகும்.

பொழிப்புரை :

நமக்கு உற்றவரும், மதிச்சடையரும், புலன்களை வென்றவருமான திருமேனிப் பெருமானர் திருச்சுழியலைத் தாம் இனிது உறைவதற்கு இடமாகப் பெற்ருர். அவரது திருநாமத்தைத் தவருது கற்றவர்கள் நற்கதிபுகுவர். ஆதலால் அவர் (நாமத்தை)ஏத்துதல் நமது கடமையாகும்.

குறிப்புரை :

திருமேனிப் பெருமான் - திருச்சுழியலில் சுவாமி திருநாமம். இறைவர் புலனைந்தும் வென்றவர் - "புலன்கள் வென்றவன் எம்இறைவன் " - சம்பந்தர் தேவாரம் திருவெண்டுரை III-61-7

திருநாமம் கற்பதின் பலனை

"மருந்தவை மந்திரம் மறுமை நன்னெறியவை
மற்றுமெல்லாம், அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே" - எனவரும் சம்பந்தர்
தேவாரத்தில் (திருநெல்வேலி - III 92 - 1) காண்க.

6. மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர் துறைக்கங்கைச்
சலந்தாங்கிய முடியான் அமர்ந்திடமாந் திருச்சுழியல்
நிலந்தாங்கிய மலராற் கொழும்புகையால் நிலைந்தேத்தும்
தலந்தாங்கிய புகழாம்மிகு தவமாம் சதுராமே III - 82 -6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை :

மலம் - மும்மலங்களை, தாங்கிய - கூடிய (பெற்ற) பாசப்பிறப்பு - ஆசைகளுக்கு இடமாகிய பிறப்பை, அறுப்பீர் - அறுக்க விரும்புபவர்களே! துறைக் கங்கைச்சலம் - துறைகளோடு கூடிய கங்கை நதியை, தாங்கிய - சுமக்கின்ற, முடியான். - திருமுடியுடையவர், அமர்த்திடமாம் - அமர்ந்துள்ள இடமாகிய - திருச்சுழியலை, நிலம் - பூமியில், தாங்கிய - உள்ள, மலரால் -பூவாலும், கொழும் - செழுமையுள்ள, புகையால் - அகில் முதலிய வாசனைப் புகையாலும், நினைந்து - தியானித்து, ஏத்தும் - ஏத்துங்கள் (துதியுங்கள்) (அதனல்) - தலம் தாங்கிய - பூமியில் நிலைக்கும்படியான, புகழால் - புகழினால், மிகு - மிக்க, தவமாம் - தவமாகும், சதுராம் - சதுராகும் (அறிவு வழியாகும்)

பொழிப்புரை :

மும்மலங்களையும், பாசப்பிறப்பையும் அறுக்க விரும்பு கின்றவர்களே !கங்கை தங்கிய முடியர் வீற்றிருக்கும் திருச்சுழியலை மலர் கொண்டும் நறும்புகை கொண்டும் நினைந்து போற்றுங்கள், அதுவே புகழுக்கு வழியாம் தவமாம், நல்லறிவாம்.

குறிப்புரை :

'நிலம்' என்பதை எழுவாயாகக் கொண்டு - நிலம் - பூமி தேவி எனப் பொருள் கொண்டு, பூமிதேவி மலராலும் புகையாலும் ஏத்தி வழிபட்டனள் - என்னுங்குறிப்பு மூன்றம் அடியில் அமைந்துள்ளது. திருச்சுழியல் பூமிதேவி பூசித்ததலம் அதனால் அத்தலத்து இறைவனுக்குப் பூமிநாதன்' என்ற பெயர் உண்டு. மலராலும் புகையாலும் ஏத்துதல் சிறந்த வழிபாடு.

"போதுஞ் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்
கேதம் எய்துதல் இல்லையே" - சம்பந்தர் தேவாரம்

திருவேற்காடு 1 - 57 -3

'நிலந்தாங்கிய பூ - நிலப்பூ. நினைந்தேத்தும் - தவமாம் - சதிராம் பிறப்பறுப்பீர் - பிறப்பை அறுப்பீர்கள் - எனவும் முடிக்கலாம்.

7. சைவத்தசெவ் வுருவன்திரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையால் அரண் மூன்றும் மெரி செய்தான்
தெய்வத்தர் தொழுதேத்திய குழகன் திருச்சுழியல்
மெய்வைத்தடி நினைவார் வினைதீர்தல் லெளிதன்றே. VII 82 -3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை :

சைவத்த - சைவம் விளங்கும், செவ்வுருவன் - செந்நிறத்தன், திருநீற்றன் - திருநீறு விளங்குபவன், உருமு ஏற்றன் - இடிபோன்ற குரலினை உடைய ஏற்றினை உடையவன், கை - கையில், வைத்த - வைத்துள்ள, ஒரு - ஒரு, சிலையால் (மேருமலை) வில்லால், அரண் மூன்றும் - மதில் மூன்றும் (முப்புரத்தையும்) எரிசெய்தான் - எரித்தவன்; தெய்வ - தெய்வத் தன்மை வாய்ந்த, தவர் - முனிவர்கள், தொழு தேத்திய - தொழுது வணங்கிய குழகன் - என்றும் இளையோனாம் (சிவன்) வீற்றிருக்கும் - திருச்சுழியலை, மெய்வைத்து - உண்மையுடன் அடிநினைவார் - ஆழ்ந்து நினைப்பவருடைய, வினை - வினைகள், தீர்தல் - ஒழிதல், எளிதன்றே - எளிதாகும்.

பொழிப்புரை :

சைவத்திருவுருவத்தை உடையவனும், திருநீறுபூசுபவனும், இடியன்ன குரலையுடைய விடையை வாகனமாக உடையவனும், கைவில்லால் மதில் மூன்று எரித்தவனும் தெய்விகமுநிவர்கள் தொழுது வணங்கும் பெருமானுமான (சிவனது) திருச்சுழியலை உண்மையுடன் உள்ளத்தில் ஆழ வைத்து நினைவோர்தம் வினையொழிவது எளிதாம்.

குறிப்புரை :

திருச்சுழியலை மெய்வைத்து - பெருமானது அடிநினைவார் - எனவும் கொள்ளலாம். மெய்வைத்து - உடலிடங் கொள்ளவைத்து - உட்கொண்டு, திருச்சுழியல் குழகன் அடிமெய் வைத்து நினைவார் (உண்மையுடன் நினைவார்) என மாற்றியும் பொருள் காணலாம். தெய்வத்தவர் - தேவர் எனலுமாம். சைவத்திவுருவன் திருநீற்றன் - "வெண்ணீறும் சைவம் விட்டிட்ட சடைகளும்" - திருவிசைப்பா 6 - 4. உருமு ஏற்றன் - (இடியார் குரலேறுடை எந்தை) சம்பந்தர் தேவாரம் - சீகாழி I 34 -3.

8 பூவேந்திய பீடத்தவன் ருனும்மடலரியும்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புகலறியார்
சேவேந்திய கொடியானவன் உறையுந்திருச்சுழியல்
மாவேந்திய கரத்தான்எம சிரத்தான்றனதடியே. VII - 82 -8

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை :

சே – இடபத்தை, ஏந்திய – கொண்ட, கொடியானவன் – கொடியைக் கொண்ட சிவன், உறையும் – வீற்றிருக்கும் திருச்சுழியல் – திருச்சுழியலில் வீற்றிருக்கும், மா ஏந்திய கரத்தான் – மான் ஏந்திய திருக்கரத்தான், எம சிரத்தான் – எமது சிரத்தில் இடங்கொண்டவனது, அடி – திருவடியையும், அவன் உறையும் திருச்சுழியலையும், பூ ஏந்திய பீடத்தவன் – தாமரைப்பூவை தமதிடமாகக் கொண்ட பிரமனும், அடல் – வலிமை பொருந்திய, அரியும் – திருமாலும், கோ ஏந்திய வினயத்தொடு – தலை சிறந்த தாழ்மையோடு, குறுக – அடையும்படி, புகல் – புகும் வழியை, அறியார் – அறியாதவர்களானார்கள்.

பொழிப்புரை :

இடபக்கொடி உடையவனும், மானேந்திய கரத்தானும், எமது சிரத்தில் உறைபவனுமாகிய சிவன் வீற்றிருக்கும் திருச்சுழியலையும், அவன் திருவடியையும் பிரமனும் திருமாலும் தலையாய வணக்கத்துடன் அணுக அறியாது போனர்கள்.

குறிப்புரை :

"சேவேந்து வெல்கொடியானே என்னும்" திருவிசைப்பா. மா ஏந்தியகரம். "மானை ஏந்திய கையினர்"– அப்பர் – V – 52 –7 (திருநாகேச்சுரம்). எமசிரத்தான் – "மனத்தகத்தான் தலைமேலான்" – அப்பர் – தாண்டகம் VI. 8.5.

9 கொண்டாடுதல் புரியாவருதக்கன் பெருவேள்வி
செண்டாடுதல் புரிந்தான்திருச் சுழியற்பெருமானைக்
குண்டாடிய சமணுதர்கள் குடைச்சாக்கியர் அறியா
மிண்டாடியவது செய்ததுவானால் வருவிதியே VII 82 –9.

பதவுரை :

கொண்டாடுதல் – மிக ஆடம்பரத்துடன், புரியா – செய்யப்பட்ட, தக்கன் – தக்ஷனது, பெருவேள்வி – பெரியயாகத்தை, செண்டாடுதல் புரிந்தான் – கோலாகலம் அடையச் சிதற அடித்த, திருச்சுழியற்பெருமானை, குண்டு ஆடிய – கீழ்மைக் குணமுடைய, சமண் ஆதர்கள் – சமண அறிவிலிகளும், குடை–குடை ஏந்தும், சாக்கியர் – புத்தர்களும், அறியா – அறியா வகைக்கு, மிண்டு ஆடிய – அது செய்ததுவானல் – மூர்க்கத்தனம் வரும்படி செய்தாரானால் அங்ஙனம் செய்தது, வருவிதியே – அவருக்கு ஏற்பட்ட தலைவிதியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை :

மிக ஆர்ப்பாட்டத்துடன் நடத்தப்பட்ட தக்கனது பெரிய யாகத்தைச் சிதற அடித்த திருச்சுழியற் பெருமானைக் கீழ்மைக் குணத்துச் சமண அறிவிலிகளும், குடை ஏந்திய புத்தரும் அறியா வகையில் எதிர்த்து வாதம் புரிகின்றார் என்றல் அது அவரது தலைவிதியாம் என்க.

குறிப்புரை :

"தக்கன் தன் வேள்வியைச் செண்ட தாடியதேவர் அகண்டன்" அப்பர் - ஆரூர் V-77. குண்டன் - இழிந்தோர். "குண்டமணர்" சம்பந்தர் - வீழிமிழலை III 80 - 10. குடை ஏந்துதல் - "பெரியவாகிய குடையும்" சம்பந்தர் - மறைக்காடு II 916‘0.

10 நீரூர் தரு நிமலன்திரு மலையார்க் கயல் அருகே
தேரூர்தரும் அரக்கன் சிரம்நெரித்தான் திருச்சுழியல்
பேரூரென வுறைவானடிப்பெயர் நாவலர் கோமான்
ஆரூரன் தமிழ்மாலைபத் தறிவார் துய ரிலரே VII - 82 -10

பதவுரை :

நிமலன் - நிமலமூர்த்தி உடைய (சிவனுடைய) நீரூர் தரு - ஊற்றருவி பாயும், திருமலையார்க்கு - கயிலை மலையாருக்கு, அயலருகே - மிக அருகில் (சமீபத்தில்) தேர் ஊர் தரும் அரக்கன் - தேரூர்ந்து சென்ற இராவணனது, சிரம் - தலையை, நெரித்தான் - நெரித்தவனும், திருச்சுழியலை, பேரூரென - தனக்குச் சிறந்த தலைநகராகக் கொண்டு, உறைவான் - உறைபவனும் ஆன, (சிவனது) அடிபெயர் - திருவடி உலவுகின்ற (மனத்தை உடைய) நாவலர் கோமான் - திருநாவலூர்த் தலைவனாம், ஆரூரன் - ஆரூரனுடைய, தமிழ்மாலை - தமிழ்ப்பாட்டு, பத்து - பத்தும், அறிவார்அறிந்து ஓதுபவர், துயர் இலர் -துயர் இலராவர்.

பொழிப்புரை :

நீரருவி பாயும் தமது திருமலைக்கு அருகே தேர் ஊர்ந்து வந்த அரக்கன் - இராவணனது சிரத்தை நெரித்தவனும், திருச்சுழியலைத் தமது பேரூராகக் கொண்டு உறைபவனுமான சிவனது திருவடியைச் சிந்தை செய்யும் திருநாவலூர்த் தலைவன் ஆரூரனது தமிழ்ப்பாக்கள் பத்தையும் அறிபவர் துயரிலர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்புரை :

பேரூர் - சிறந்த பெரிய ஊர். அடிபெயர் - அடிபெயரும் அடிஅசையும், பெயராக - "நாவலர் கோமான்" "ஆரூரான்" என்பன கொண்டவனும் - என்பதுமாம் உறைவானது அடியையும் பெயரையும் (திருநாமத்தையும்) உள்ளத்தில் கொண்ட நாவலர் கோமான் - எனவும் கொள்ளலாம். மாலை - பாட்டு. "தமிழ் மாலை பத்தும் நினைவார்" - சம்பந்தர் - திருநறையூர் || 87-11

பின்குறிப்பு :

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனருடன் திருவிராமேச்சுரம் பணிந்து அங்கிருந்தே திருக்கேதீச்சரத்தைப்பாடிப் பிறபதிகளையும் வணங்கிக் கொண்டு திருச்சுழியலையடைந்து தொழுது பாடியது இத்திருப்பதிகம் (பெரிய புராணம் - கழறிற். பு - 111) சில பதிப்புக்களில் இப்பதிகத்தில் நட்டராகம் என்று பதிப்பிக்கபட்டிருக்கிறது. நட்டபாடைபண் ; நாட்டை ராகம். இப்பதிகத்திற்கும், இங்கிருந்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிச் சென்ற "தொண்டரடித் தொழல்" என்ற பதிகத்திற்கும் பெரிய புராண உரையாசிரியர் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் விரிவுரை எழுதித் தந்துள்ளார்கள். அது அடுத்த வெளியிடப்படும்.

ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமான் அருளிய
திருக்கோவையார்.

26 - உழையரியற் பழித்தல்

உழையரியற்பழித்தல் என்பது தோழி தலைமகனையியற்பழித்துக் கூற நிற்பக்கேட்டு, தன்மாட்டன்புடை நெஞ்சத்தையுடைய விவள் பேதுற இதற்குப் பரியாமையின் வயலூரன் வரம்பிலனென உழையர் அவனையியற் பழித்துக்கூறநிற்றல். அதற்குச் செய்யுள் -

அன்புடை நெஞ்சத்திவள்பேதுற அம்பலத் தடியார்
என்பிடை வந்ததமிழ் தூறநின்றாடியிருஞ் சுழியல்
தன்பெடை நையத் தகவழிந்தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல் துயிலும் வயலூரன் வரம்பிலனே. - 377

அரத்தவேல் அண்ணல் பரத்தையிற்பிரியக்
குழைமுகத்தவளுக் குழையருரைத்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் பொருள் - அடியார் என்பிடை அமிழ்து வந்து ஊற - அடியவரென்புகளிடையே அமிழ்தம் வந்தூற, அம்பலத்து நின்றடி இருஞ்சுழியல் - அம்பலத்தின் கண்ணே நின்றாடுவானது பெரிய சுழியலின் கண், தன் பெடை நையத்தகவு அழிந்து - தன்பெடை வருந்தத்தகுதிகெட்டு, அன்னம் சலஞ்சலத்தின் வன்பெடைமேல் துயிலும் - அன்னஞ் சலஞ்சலத்தினது வலிய பெடைமேற் கிடந்துறங்கும், * வயல் ஊரன் - வயலாற் சூழப்பட்ட ஊரையுடையவன். அன்புடை நெஞ்சத்து இவள் பேதுறதன் மாட்டன் புடைய நெஞ்சத்தை - யுடைய இவள் மயங்காநிற்ப இதற்குப்பிரியாமையின், வரம்பு இலன் - தகவிலன் எ-று.

அன்புடை நெஞ்சத்திவளென்றதனால் பரத்தையரதன் பின்மை கூறப்பட்டதாம். இருஞ்சுழியலூரெனவியையும் சுழியலென்பது ஒரு திருப்பதி. வன்பெடையென்றதனாற் பரத்தையரது வன்கண்மை விளங்கும். ஒரு சொல் வருவியாது பேதுறுதலான் வரம்பிலனென்றுரைப்பாருமுளர். உள்ளுறையுவமம் வெளிப்பட நின்றது. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு. அழுகையைச் சார்ந்த நகை. பயன்: தலைமகனை யியற்பழித்துத் தலைமகளை யாற்று வித்தல். சலஞ்சலம் - சங்கு; இது வலம்புரிச்சங்கு ஆயிரம் தன்னைச் சூழ்ந்து விளங்கும் சங்கு இது பேராசிரியர் உரை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாட்டுத் தொகை
பண் : இந்தளம்

தென்னூர் கைம்மைத் திருச்சுழியல் திருக்கானப்பேர்
பன்னூர் புக்குறையும்பர மர்க்கிடம் பாய்நலம்
என்னூரெங்கள் பிரானுறை யுந்திருத் தேவனூர்
பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே 6

* திருச்சுழியலுக்கு வயலூர் என்றபெயரும் உண்டு.
"இந்துசேகரனர் வயலூரிதுவென்று" - தலபுராணம்.

31 . திருஇடையாற்றுத் தொகை பண் : கொல்லி

சுற்றுமூர் சுழியல் திருச்சோபுரத் தொண்டர்
ஒற்றுமூரொற்றியூர் திருவூறலொழியாப்
பெற்றமேறி பெண்பாதியிடம் பெண்ணைத் தெண்ணீர்
எற்றுமூ ரெய்தமான் யிடையாறிடை மருதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநாவுக்கரசு சுவாமிகள் காப்புத் திருத்தாண்டகம்

திருநீர்ப் புனற்கெடில் வீரட்டமுந்
திருவளப்பூர் தெற்கேறு சித்தவடம்
வருநீர் வளம்பெருகு மாநிருபமும்
மயிலாப்பின் மன்னினார் மன்னியேத்தும்
பெருநீர் வளர்சடையான் பேணி நின்ற
பிரமபுரஞ் சுழியல் பெண்ணாகடம்
கருநீல வண்டரற்றுங் காளத்தியுங்
கயிலாயந்தம் முடைய காப்புக்களே ! 12

பெரிய புராணம்

பற்றர்தம் புரங்கண்மலைச் சிலையாற் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்றரும் பணிபூண்ட புனிதனார்தம்
பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழுந்துபாடிக்
கற்றார்கள் தொழுதேத்துங் கானப்பேருங்
கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலங் குறும்பலாக் கும்பிட்டேத்திக்
கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகினாரே 886

- திருஞானசம்பந்தர் புராணம்

அங்குறைந்து கண்ணுதலா ரருள் சூடியகன்று போய்ப்
பொங்கு தமிழ்த்திரு நாட்டுப் புறம்பணை சூழ்நெல்வேலி
செங்கண் விடையார் மன்னுந் திருக்கானப்பேர் முதலா
வெங்குநிகழ் தானங்களெல்லாம் புக்கிறைஞ்சுவார் 410

- திருநாவுக்கரசு நாயனா புராணம்

திருவிரா மேச்சுரத்துச் செழும்பவளச் சுடர்க் கொழுந்தைப்
பரிவினாற்றொழுத கன்று பரமர்பதி பிறபணிந்து
பெருவிமானத் திமையோர் வணங்கு பெருந்திருச்சுழியல்
மருவினார் வன்றொண்டர் மலைவேந்தருடன் கூட

திருச்சுழிய லிடங்கொண்ட செம்பொன்மலைச் சிலையாரைக்
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல்விடத்தின்
இருட்சுழியு மிடற்றாரை யிறைஞ்சியெதி ரிதழிமலர்ப்
பருச்சுழியத் துடனூனாயுயிரெனும்பா மலர் புனைந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கணரைப் பணிந்துறையு மாரூரர்க் கவ்வூரிற்
கங்குலிடைக் கனவின் கட் காளையாந்திரு வடிவாற்
செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேட மென்புருக முன்காட்டி

கானப்பேர் யாமிருப்ப தெனக்கழறிக் கங்கையெனும்
வானப் பேராறுலவு மாமுடியார் தாமகல
ஞானப் பேராளருணர்ந் ததிசயித்து நாகமுடன்
ஏனப் றெயிரணிந்தா ரருளிருந்த பரிசென்பார்

கண்டருளும் படிகழறிற் றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரீகப் புனற்சுழியற் புனிதர்கழல் வணங்கிப்போய்
அண்டர்பி ரான் றிருக்கானப் பேரணைவா ராரூரர்
தொண்டரடித் தொழலுமெனுஞ் சொற்பதிகத் தொடைபுனைவார்

- சேரமான் பெருமாணாயனார் புராணம் 110 to 114

உமாபதி சிவாசாரியார் அருளிய திருப்பதிக் கோவை

ஆலவா யாப்பனூர் பரங்குன்றே டகத்தோ
டருங்கொடங்குன்றந் திருப்புத்தூர் புனவாயிலினோ
டேலுமிரா மேச்சர மாடானை காணப்பே
றெழிற்றிப்பூவணக்கு சுழியலின்புறு குற்றாலம்
பாலலோசனன் றிருநெல்வேலியோடு
பாண்டி பதினான்கு மலை நாட்டிலஞ்சைக்கள மொன்றே
சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி
திருநனா கொடி மாடச் செங்குன்றார்தானே

உமாபதி சிவம் அருள் திருப்பதிக்கோவை

திருவாரூர்ப் பரவையுண்மண் டளிசாத்தமங்கை
சிற்றேமந் தெளிச்சேரி திருவுசாத்தானங்
கரவீரந் திருவாலம் பொழில் வெண்ணெய்நல்லூர்
கச்சியனேக தங்காவதங் கோடிக்குழக
ரரசிலி தென்குடித்திட்டை வடமுல்லைவாயி
லம்பர்ப் பெருந்திருக்கோவில் வெண்பாக்கஞ்சுழியல்
பெருமணமிந்திர நீலபருப்பதம் வேற்காடு
பேரெயில் பாற்றுறைமூக்கீச் சரமுண்டீச்சரமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தேவி -

துணைமாலை யோடும் சுழியனகர் மேவும்
இணையார் திருமேனி யீசா

– சிவக்ஷேத்திர சிவநாமக்கவி வெண்பா
(உமாபதி சிவம்)

முதியவர்மூவர் தமிழ்கொள் சுழியல் முதிரநெல்லை
துதிசெய் பரங்குன்றமாடானை காளையார் தூவாப்பனூ
ரெதிர்கொடுங்குன்று புனவாயில் பூவண மேடகமே
மதுரைகுற்றால மிராமேசம் பாண்டியன் மண்டலமே

– பாண்டி மண்டலசதகம்
(மதுரை ஐயம்பெருமாள் ஆசிரியர்)

மற்றும் பாண்டி நாட்டுத் தலபுராணங்களிலும் பிற்காலப் பிரபந்தங்களிலும் சுழியற் பெருமையைக் காணலாம்.

திருச்சுழியற் புராண ஆசிரியர் வரலாறு

திருச்சுழியற் புராண ஆசிரியர் பெயர் ஆராவமுதா சாரியர் என்பது. இவர் ஆக்கியோன் பெயரைப் புராணத்துக்குட் குறிக்க வில்லை. 1895ம் ஆண்டு பதிப்பிற்கு புராணத்தின் பல பிரதிகளை ஆய்ந்துதவிய தாமோதரபுரம்.

வித்வான் திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பாடிய சிறப்புப்பாயிரத்தில் ஆராவமுதன் என்ற பெயர் காணப்படுகிறது.

அன்புருவானற் கலைதேரா ராவமுதனுல
கின்புறவே தென்சுழிய லீசனிசை – மன்பவநோய்
போக்கு மருந்தாப்புகன்ற தற்குக் கைமாறிங்
காக்கு நர்யாரெண்பே னறித்து.

ஆராவமுதன் என்பது சிவபெருமானது திருப்பெயர்களுள் ஒன்று. 'ஆராவமுதே அளவிலாப் பெரும்மானே' 'ஆராவமுதின் அருட்டாளிணைபாடி' எனவருந் திருவாசகமுங் காண்க. இவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சுழியலில் கீழைத்தேர்த் தெருவில் வாழ்ந்தவர் என்பதும் சிற்ப வல்லுநர் (விஸ்வகர்மர்) வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் செவிவழிச்செய்தியாகும். சிற்ப நூல் நுட்பத்தை முத்திமா நகரச்சருக்கம் 30 வது செய்யுளில் காணலாம். இவர் வடமொழி தமிழ் மொழியில் மிக்கபுலமையுடையவர். இவர் பெரும் பற்றப்புலியூர் திருவாலவாயுடையார் திருவிளையாடல் இயற்றிய செல்லூர் நம்பிகள் மாணவர் என்பது இவர் இயற்றிய புராணத்தில் அவரைத் துதித்திருக்கின்ற பாடலால் தெரியவருகிறது. மேலும் செய்யுள் அமைப்புகளை நோக்குங்கால் நம்பிகள் திருவிளையாடற் செய்யுட்களைப் பின்பற்றியே பாடியுள்ளார் என்பதும் புலனாகிறது. இவர் தலைசிறந்த சிவபத்தியுடையவர் என்பதும் ஆங்காங்கு வரும் சிவபரத்துவச் செய்யுட்களால் விளங்குகிறது. சென்னை இராவ்பகதூர் தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை எம்.ஏ.அவர்கள் இப்புராணத்தைப் பற்றி'' அருமையான வாக்கு செந்தமிழிச்சுவையும் பத்திச்சுவையும் ததும்பும் நூல்'' என மதிப்புரை வழகியுள்ளதால் இந்நூலின் பெருமையை உணரலாம், நம்பிகள் காலம் கி.பி. 1227க்கு முன்பு, ஒரு காலத்தவர் என டாக்டர் உ.வே. சாமிநாதஐயரவர்கள் திருவிளையாடல் முன்னுரையில் குறிப்பித்திருப்பதால் இவரது காலம், அவரது காலமே எனக்கொள்ள திருவிளையாடல் முன்னுரையில் குறிப்பித்திருப்பதால் இவரது காலமும், அவரது காலமே எனக்கொள்ளலாம் மகா கந்தபுராணத்தின் க்ஷேத்திர காண்டத்தில் (வடமொழி) உள்ள திருச்சுழியற் புராணத்தை மொழி பெயர்த்து 15 சருக்கங்களாக பாயிரம் உள்பட பாயிரம் உள்பட 600 திரு விருத்தங்களில் பாடியதாக பாயிரத்தில் (23) கூறுகிறார். ஆனால் இவர் திருச்சுழியலில் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு இறைவன் காளைப் பருவத்தினராய்க் காட்சி தந்த வரலாற்றைப் பாடவில்லை, பின்னர் யாழப்பாணம் அம்பலவாண நாவலரவர்கள் பெரிய புராணத்தைப் பின் பற்றி 'காளையார் காட்சிச்சருக்கம் என ஒரு சருக்கம்பாடி 149 செய்யுட்களைச் சேர்த்து வெளியிட்டுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற் பதிப்பும், இரண்டாம் பதிப்பும் திருப்பணிச் செல்வர் தி.அ.சு.அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டன. அம்பலவாண நாவலர் யாது காரணத்தாலோ முதற் பதிப்பிலுள்ள செய்யுட்கள் சில வற்றை நீக்கியும் வேறுபல செய்யுட்களை மாற்றியும் அச்சிட்டுவிட்டார்.இரண்டாம் பதிப்பு வெளியிட்டது. சுமார் 1961ம் வருடம் ஐப்பசி மாதம் ஆகும் ஆண்டாகும். இந்நூலை மீண்டும் அச்சிடுங்கால் தக்காரைக்கொண்டு இரு பதிப்புக்களையும் ஒப்பு நோக்கி வழுக்களைந்து வெளியிட வேண்டும் என்பது என் விருப்பமாகும்.



இறை பணியில்.........

ஒளி அச்சுக்கோர்வை & தானியங்கி முறையில் அச்சிட்டோர்

அனு பிரிண்டர்ஸ்

1D, T.T.கிருஷ்ணமாச்சாரி ரோடு, (எம்.ஜி.ஆர். சிலை மேம்பாலம் அடியில்)

விருதுநகர் - 626 001. விருதுநகர் மாவட்டம்

Ph No : (04562) 247270, Cell : 94875 47275.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கவ்வைகடல் தெப்பக்குளம்